நகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a News paper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 03 வெள்ளிக்கிழமை (18.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 212




# தமிழருக்கு எதிரான மனித உரிமை மீறல் இலங்கையில் எல்லை மீறி சென்று விட்டன

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் எல்லை மீறிச் சென்றிருப்பதால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் விரைவில் நியமிக்கப்பட வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. மனித உரிமை மீறல்கள் தொடர்ப[illegible] அறிக்கைகள் குறித்துக் கவனம் செலுத்தியிருக்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கொழும்பிலுள்ள விடுதிகளில் தங்கியிருக்கும் தமிழ்மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறித்தும் கவலை வெளியிட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## அனுசரணையாளராகச் செயற்பட ஐஸ்லாந்து அரசாங்கம் விரும்பம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகளில் அனுசரணைப் பணியாற்றுவதற்கு தயாராக இருப்பதாக ஐஸ்லாந்து குடியரசு ஜனாதிபதி ஒலாஃவூ ரங்னர் கிரிம்ஸன் தெரிவித்துள்ளார்.

தற்போது ஐஸ்லாந்து சென்றிருக்கும் சுவீடனுக்கான இலங்கைத் தூதுவர் ரஞ்சித் ஜெயசூரியவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்த போதே ஐஸ்லாந்து குடியரசின் ஜனாதிபதி ஒலாஃவூ ரங்னர் கிரிம்ஸன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் தொடர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவை நோக்கிய நடவடிக்கை கள நிலைமையின்படி ஆரம்பமாகும்



### யாழ்.இராணுவத் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கள நிலைமைகளைப் பொறுத்துத்தான் ஆனையிறவை நோக்கிய தமது அடுத்த கட்ட நடவடிக்கை அமையும் என்று இராணுவத்தின் யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

தென் பகுதியிலிருந்து வந்த சிங்கள ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஆனையிறவை நோக்கிய எமது அடுத்த கட்ட நடவடிக்கை கள நிலைமைகளைக் கருத்தில் கொண்டே இடம்பெறும். கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எமக்குப் பின்னடைவுகளைத் தரவில்லை. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரி ஆசிரிய நியமனம் நேர்முகத் தேர்வு திருமலையில்

(திருகோணமலை)

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்காக அண்மையில் நடாத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் பங்குபற்றாதவர்கள் திருகோணமலையில் அமைந்துள்ள மாகாணக் கல்வி அமைச்சில் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும் நேர்முகத் தேர்வில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

நேர்முகத் தேர்வு (12 ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலியாவுக்கு புதிய தூதுவர் நியமனம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக சேனக வல்கம்பாய நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் தலைநகரான கன்பராவில் கடந்த திங்கட்கிழமை புதிய தூதுவராக அவர் பொறுப்பேற்றார்.

கண்டி ரிறினிற்றி கல்லூரியில் கல்வி கற்ற அவர், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சட்டப் பிரிவில் பட்டம் பெற்றவர். இலங்கைத் தலைமை நீதி (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை மத்திய அரசு கண்டிக்க வேண்டும்

### தி.மு.க. கோரிக்கை

(சென்னை)

தமிழக மீனவர்கள் தொடர்ந்து கச்சதீவுப் பகுதியில் இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்கு ஆளாவதைத் தடுத்து நிறுத்தும் வகையில் மத்திய அரசு இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவரை அழைத்து தொடரும் அச் சம்பவங்களுக்குக் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என தி.மு.கவின் உயர் நிலைக் குழு கேட்டுக் கொண்டிருக்கின்றது.

இதைவிட விரைவில் நடைபெற இருக்கின்ற தெற்காசிய நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதமர் மன்மோகன் சிங் அச் சமயத்தில் இலங்கை ஜனாதிபதியிடம் தாக்குதல்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்டவர் சடலமாக மீட்பு

(மட்டக்களப்பு)

ஏறாவூரில் கடத்தப்பட்ட ஒருவரின் சடலம் புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. அடிகாயங்களுடன் அந்தப் பகுதியிலுள்ள ஈ.பி.டி.பி. காரியாலயத்திற்கு அருகிலுள்ள காணி ஒன்றிலேயே அச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

36 வயதான தேவதாசன் சுரேஸ்குமார் எனும் இந்த வர்த்தகர் கடந்த மாதம் 19 ஆம் திகதி கடத்தப்பட்டுக் காணாமல் போனதாக உறவினர்களால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## விடத்தல் தீவில் விமானத் தாக்குதல்

(மன்னார்)

விடத்தல் தீவு பகுதியில் விடுதலைப்புலிகளின் இலக்கொன்றின் மீது விமானப் படையினர் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விடத்தல் தீவிலிருந்து 5 கிலோமீற்றர் தூரத்தில் வடக்காக நேற்றுப் பகல் 12.15 மணியளவில் இந்தத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வவு. பூந்தோட்டம் முகாமில் தீ விபத்து 112 குடிசைகள் முற்றாக எரிந்து நாசம்

## மூவாயிரம் பேர் நிர்க்கதி நிலை

(வவுனியா)

வவுனியாவில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த பூந்தோட்டம் முகாமில் நேற்று ஏற்பட்ட தீ அனர்த்தத்தில் 112 குடிசைகள் முற்றாக எரிந்து சாம்பலாகியதால் சுமார் 3 ஆயிரம் பேர் நிர்க்கதியாகியுள்ளனர்.

பூந்தோட்டம் முகாமில் உள்ள குடிசை ஒன்றில் நேற்றுக் காலை முற்பகல் 9.30 மணியளவில் ஏற்பட்ட மின்சார ஒழுக்கையடுத்தே அப் பகுதியில் இருந்த 112 வீடுகளும் எரிந்து சாம்பலாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தீ பரவத் தொடங்கியதும் அங்கிருந்த மக்கள் தீயைக் கட்டுப்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்தபோது தீ விரைவாகப் பரவி அங்கிருந்த அனைத்துக் குடிசைகளையும் எரித்து சாம்பலாக்கியதுடன் மக்களின் சொத்துக்களும் எரிந்து நாசமாகியுள்ளன.

தீ பரவியதையடுத்து அப் பகுதிக்கு விரைந்த பொலிஸாரும் படையினரும் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். எனினும் தீயைக் கட்டுப்படுத்த அவர்களால் முடியாமல் போயிற்று.

இந்தத் தீ (12 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

தரம்-05 புலமைப் பரிசில்

பயிற்சி வினாத்தாள் - 09

பகுதி -II

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ். நீதிபதிகளைப் பொறுப்புக் கூறி வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது

## மேல் நீதிமன்ற நீதிபதி விக்னராஜா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உயிர்ப் பாதுகாப்பு கருதி யாழ்ப்பாணத்தில் சரணடைந்தவர்களின் எதிர்காலம் நிச்சயமற்ற தன்மையில் இருப்பதாக யாழ்.நீதிபதிகளை பொறுப்புக் கூறி 'தமிழ் நெற்' இணையத்தளத்தில் வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜாவால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவின் பணிப்புரைக்கு அமைய 08.07.2008 செவ்வாய்க்கிழமை ஒரு ஊடகத்தில் உயிர்ப்பாதுகாப்பு கருதி யாழ்ப்பாணத்தில் சரணடைந்தவர்களின் எதிர்காலம் நிச்சயமற்ற தன்மையில் இருக்கிறது என்ற தலைப்பில் குடாநாட்டில் கடமையாற்றும் சில நீதிபதிகளைப் பொறுப்புக்கூறி தவறான, உண்மைக்குப் புறம்பான செய்தி வெளியானது.

யாழ்.சட்டத்தரணிகள் சங்கப் பேச்சாளரால் கொடுக்கப்பட்டதாகக் காணப்படும் இவ்விடயம் தொடர்பாக யாழ்ப்பாண நீதிமன்ற கட்டடத் தொகுதியில் 17.07.2008 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையில், மாவட்ட நீதிபதி இரா.வசந்தசேனன் இணைந்து, சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், செயலாளர் கே.கேசவன், பொருளாளர் பா.தவபாலன் உட்பட குடாநாட்டில் உள்ள 32 சட்டத்தரணிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் ஆராயப்பட்டது.

குறித்த செய்தி யாழ்.சட்டத்தரணிகள் சங்கப் பேச்சாளரால் கொடுக்கப்படவில்லை என்றும் உண்மைக்குப் புறம்பான இச் செய்தியை வன்மையாக மறுப்பதாகவும் இது தொடர்பில் குறித்த ஊடகத்துக்கு அறிவித்து இச் செய்தியை வெளியிட்ட பேச்சாளர் யார் என்பதை அறியத்தருமாறு கோருவதாகவும் ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எதிர்காலத்தில் யாழ்.சட்டத்தரணிகள் சங்கம் தொடர்பான செய்தி அவர்களிடமிருந்து வந்துள்ளதா என்பதை உறுதிப்படுத்திய பின் வெளியிடப்படவேண்டு என்று கோருவதென்றும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இத் தீர்மானத்தின் பிரதிகள் மாட்சிமை தங்கிய பிரதம நீதியரசருக்கும், குறித்த ஊடகத்துக்கும் அறிவிப்பதென்றும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)



இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் ஆயுள் காப்புறுதி பெற்ற அன்ரன் கூசைதாசன் காலமானதையிட்டு அவரின் காப்புறுதித் தொகைக்குரிய காசோலையை அன்னாரின் மனைவி திருமதி அ.கிரேஸ் மடோனாவிடம் யாழ்.பிராந்திய முகாமையாளர் திருமதி ஆர்.எப்.அரியநாயகம் கையளிப்பதையும் காப்புறுதி அமைப்பாளர் த.கனகசபை, நிர்வாக உத்தியோகத்தர் அ.சபேசன் மற்றும் அஜித், செந்தூரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: க.கோபி)

## க.பொ.த (உ/த) -2008 நேர அட்டவணை

| | முற்பகல் | பிற்பகல் |
|---|---|---|
| | **ஆகஸ்ட் 06 புதன்கிழமை** | |
| 1 | 08.30 - 11.30<br>10 இணைந்த கணிதம் I<br>78 அரபு I | 12.30 - 14.30 09. உயிரியல் I<br>12.30 -15.30 21 பொருளியல் I பகுதி I, II<br>79 மலாய் I<br>80 பேர்சிய மொழி I |
| | **ஆகஸ்ட் 07 வியாழக்கிழமை** | |
| 2 | 08.30 - 11.30<br>09 உயிரியல் II<br>21 பொருளியல் II பகுதி I, II<br>79 மலாய் II<br>80 பேர்சிய மொழி II | 12.30 - 15.30<br>52 நாட்டியம் -சிங்களம் I<br>53 நாட்டியம் - பரதம் I<br>54 சங்கீதம் - கீழைத்தேயம் I<br>55 சங்கீதம் - கர்நாடகம் I<br>56 சங்கீதம் - மேலைத்தேயம் I |
| | **ஆகஸ்ட் 08 வெள்ளிக்கிழமை** | |
| 3 | 08.30 - 11.30<br>10 இணைந்த கணிதம் II<br>52 நாட்டியம் - சிங்களம் II<br>53 நாட்டியம் - பரதம் II<br>78 அரபு II | 14.00 - 16.00<br>08 விவசாய விஞ்ஞானம் I<br>14.00 - 17.00<br>48 கிரேக்க உரோம நாகரிகம் I |
| | **ஆகஸ்ட் 09 சனிக்கிழமை** | |
| 4 | 08.30 - 11:30 33 கணக்கீடு I பகுதி I, II<br>51 சித்திரம் I<br>82 ஜேர்மன் I<br>83 ருசியன் I<br>85 உருது I<br>86 சீன மொழி I | 12.30 - 15.30<br>48 கிரேக்க உரோம நாகரிகம் II<br>54 சங்கீதம் கீழைத்தேயம் II<br>55 சங்கீதம் -கர்நாடகம் II<br>56 சங்கீதம் - மேலைத்தேயம் II |
| | **ஆகஸ்ட் 11 திங்கட்கிழமை** | |
| 5 | 08.30 - 10.30 01 பௌதிகவியல் I<br>08.30 - 11.30 33 கணக்கீடு II பகுதி I, II<br>51 சித்திரம் II | 12.30 - 15.30<br>08 விவசாய விஞ்ஞானம் II<br>82 ஜேர்மன் II<br>83 ருசியன் II<br>85 உருது II<br>86 சீனமொழி II |
| | **ஆகஸ்ட் 12 செவ்வாய்கிழமை** | |
| 6 | 08.30 - 11.30 01 பௌதிகவியல் II<br>51 சித்திரம் III | 12.30 - 15.30 24 அளவையியலும் விஞ்ஞான முறையும் I |
| | **ஆகஸ்ட் 13 புதன்கிழமை** | |
| 7 | 08.30 - 11.30 71 சிங்களம் I<br>72 தமிழ் I | 12.30 - 15.30 28 மனைப்பொருளியல் I<br>76 இலத்தீன் I |
| | **ஆகஸ்ட் 14 வியாழக்கிழமை** | |
| 8 | 08.30 - 11.30 71 சிங்களம் II<br>72 தமிழ் II | 12.30 - 15.30 28 மனைப்பொருளியல் II<br>76 இலத்தீன் II |
| | **ஆகஸ்ட் 15 வெள்ளிக்கிழமை** | |
| 9 | 08.30 - 10.30 02 இரசாயனவியல் I<br>08.30 - 11.30 41 பௌத்தம் I<br>77 கிரேக்கம் I<br>81 பிரெஞ்சு I | 14.00 - 17.00 24 அளவையியலும் விஞ்ஞான முறையும் II |
| | **ஆகஸ்ட் 18 திங்கட்கிழமை** | |
| 10 | 08.30 - 11.30 02 இரசாயனவியல் II<br>08.30 - 11.30 41 பௌத்தம் II<br>77 கிரேக்கம் II<br>81 பிரெஞ்சு II | 12.30 - 15.30 32 வணிகக்கல்வி I பகுதி I, II<br>84 ஹிந்தி I |
| | **ஆகஸ்ட் 19 செவ்வாய்கிழமை** | |
| 11 | 08.30 - 11.30 13 பொதுஆங்கிலம் I | 12.30 - 15.00 13 பொதுஆங்கிலம் II |

(தொடரும்)

## தங்கம்மா அப்பாக்குட்டியின் நினைவுப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஏற்பாட்டில் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் விசேட நினைவுப் பிரார்த்தனை இன்று காலை 10 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து 12 மணிக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (ச)

## வலி.வடக்கு பிரதேச சபை மயான அபிவிருத்திக் குழு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் உள்ள மயான பூமிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஒவ்வொரு மயானங்களிற்கும் ஒவ்வொரு மயான அபிவிருத்திக் குழு அமைக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக தம்மளை, கேணிப்பிட்டி, பத்துப்பனையடி, மல்லாகம் இந்து ஆகிய மயானங்களுக்கான அபிவிருத்திக் குழு தெரிவு நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு அளவெட்டி மகாஜன சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக காங்கேசன்துறை வலி.வடக்கு பிரதேச சபை செயலாளர் இ.அருணகிரி அறிவித்துள்ளார். (அ-15)

## தேவாரத்திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித் தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பராயணம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிமுதல் பலாலி வீதி, கந்தர்மடம் இந்துசமய பேரவை ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலில் நடைபெறும். (ச)

# யுத்தத்தை ஆதரித்துவரும் எம்மை புலிகள் என கூறுவது நன்றிகெட்டதனம்

## சோமவன்ச கவலை



(கொழும்பு)

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் யுத்தத்திற்கு அன்றிலிருந்து இன்றுவரை நாம் ஆதரவு வழங்கி வருகின்றோம்.

எனினும் எம்மையே புலிகள் எனக் கூறும் அளவுக்கு அரசாங்கம் நன்றி கெட்டதனமாக செயற்படுகின்றது.

வேலை நிறுத்தம் செய்தமையினால் லால்காந்த எம்.பி இன்று புலியாகிவிட்டார் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

மக்களின் ஆதரவை உரசிப் பார்க்கவே இரு மாகாண சபைத் தேர்தல்களை அரசாங்கம் நடத்துகின்றது என்றும் அவர் மேலும் கூறினார்.

அநுராதபுரத்தில் கடபனஹவில் நேற்று மாலை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அரசு முன்னெடுக்கும் பயங்கரவாதிகளுக்கு எதிரான யுத்தத்துக்கு அன்றிலிருந்து இன்றுவரை நாங்களே ஆதரவு வழங்கி வருகின்றோம்.

எனினும் எம்மையே புலிகள் என சொல்லும் அளவுக்கு அரசாங்கம் நன்றி கெட்டதாகச் செயற்படுகின்றது. வேலை நிறுத்தம் செய்தமையால் லால்காந்த தற்போது புலியாகிவிட்டார்.

இன்னும் யார் யாரை எல்லாம் புலியாக்கப்போகிறார்களோ தெரியவில்லை.

மத்திய மாகாண சபை, கிழக்கு மாகாண சபை தவிர்ந்த எந்த ஒரு மாகாண சபையிலும் அரசுக்கு பெரும்பான்மையில்லை.

மாகாண சபைகளை இரண்டிரண்டாக கலைத்து வாக்குக் கொள்ளையில் ஈடுபடவே தற்போது இவ்விரு மாகாண சபைகளும் கலைக்கப்பட்டுள்ளன.

நிச்சயம் 24ஆம் திகதியாகும்போது பேர்டி தலைமையிலான மோசடிக் கோஷ்டியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு எமது குழுவிடம் மாகாண சபையை ஒப்படையுங்கள் .

முன்பு 10 வருடங்கள் ஐ.தே.கவும் 9 வருடங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பும் இம்மாகாணத்தை ஆட்சி செய்துள்ளன.

ஐந்து வருடங்களுக்கு எமக்குத் தந்து பாருங்கள் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்றார். (ச-5)

## புனரமைக்கப்பட்ட விடுதி திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மருத்துவ சுகாதார கழகத்தின் நிதியுதவியுடன் முப்பது இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் விடுதி திறப்புவிழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் கலந்து கொண்டு விடுதியை திறந்து வைப்பார். (ச)

# இன்று ஒரு தகவல்

## செல்வம்

ஒரு ஊரில் ஒரு பெரிய செல்வந்தர் இருந்தார். அவருக்கு பணத்துக்கு பஞ்சம் இல்லை. அதனால் இந்த உலகத்தில் முடியாத காரியம் எதுவும் இல்லை என்று நினைத்தார்.

அந்த ஊருக்கு! குருநானக் ஒருதடவை வந்தார். அவரை வரவேற்ற செல்வந்தர். வீட்டுக்கு வந்து விருந்து சாப் பிட்டு விட்டுப் போக வேண்டும் என்று அழைத்தார். அவரும் சரி என்று ஒத்துக்கொண்டார்.

உடனேதன்து பங்களாவில் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தார். குருநானக் கை அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனார் .

அவரிடம் ''ஐயா நான் இந்த ஊரிலேயே மிகவும் வசதியுள்ளவன் என்னால் எல்லாம்முடியும். உங்களுக்காக நான் என்ன செய்ய வேண்டும் ? என்று சொல்லுங்கள் ! எதுவாகஇருந்தாலும் பரவாயில்லை! எவ்வளவு செலவானாலும் செய்கிறேன் சொல்லுங்கள்!'' என்றார் பணிவுடன். இதைக் கேட்டதும் குருநானக் சிந்தித்தார்.

அதன்பின் தன்னுடைய சட்டைப் பையிலிருந்து ஒரு பழைய ஊசி ஒன்றை எடுத்தார். அதை அந்த செல்வந்தரிடம் கொடுத்து ''இதோ... பாருங்கள் ... இவ்வளவு தூரம் நீங்கள் கேள்வி கேட்பதனால் சொல்கிறேன் இந்த ஊசியை பத்திரமாக வைத்திருங்கள் நாம்இருவரும் இறந்து போனபின்இன்னொரு உலகத்தில் சந்திக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது! அப்பொழுது இந்த ஊசியை என்னிடம் கொண்டு வந்து கொடுங்கள்இது தான் நீங்கள் எனக்குசெய்ய வேண்டிய உதவி என்றார் குரு நானக் சிரித்துக்கொண்டே.''

இதைக்கேட்டவுடன் அந்தச் செல்வந்தர் முழிக்க ஆரம்பித்தார். அது எப்படி நான் இறந்த பின் இந்த ஊசியை எடுத்துக்கொண்டு இன்னொரு உலகத்துக்குவரமுடியும்? என்றார்.

''ஊசிமாதிரி சின்னப்பொருளைக்கூட . இந்த உலகத்தை விட்டு எடுத்துக்கொண்டு போக முடியாது எனும் போது உங்களுடைய செல்வத்தை எல்லாம் எப்படி அங்கே எடுத்துக் கொண்டு வரப்போகிறீர்கள்? என்று கேட்டார் குருநானக். அதற்குப்பிறகு தான் அந்தச் செல்வந்தர் யோசிக்க ஆரம்பித்தார்.

குருநானக்சொன்னார் நாம் செய்யும் நல்லது கெட்டது தான்கடைசிவரைக்கும் நம் முடன்இருக்கும். அடுத்தவர்கள் நன்றாகஇருக்க வேண்டும் என்பதற்காக பொருளைசெலவுசெய்ய வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால்எந்தப் பிரயோசனமும் இல்லை'' என்றார்.

குருநானக்கின்அறிவுரைகளைக் கேட்டதும் செல்வந்தரின்அறிவுக்கண் திறந்தது. உடனேகுருநானக்கை வணங்கினான்.

''ஐயா... என்னிடமிருந்த ஆணவம் போய்விட்டது. இனிமேல்என்னிடமுள்ள செல்வத்தை நல்ல வழியில் செலவழிப்பேன்!'' என்றார்.

நம்மிடம்இருக்கின்றபணம் எப்பொழுதும் நம்முடன் கூடவே வந்து கொண்டிருக்காது என்பது இதிலிருந்து புரிகிறது.

முறையான வழியில் பணம் சேர்க்க வேண்டும் அதை முறையானவழியில் செலவு செய்ய வேண்டும். அதனால் ஏற்படக்கூடிய மனநிறைவு அதை அனுபவித்தவர் களுக்குத்தான் தெரியும்.

சொர்க்கத்துக்குப்போகிறவர்கள் இங்கேஇருந்துபணத்தை எடுத்துக்கொண்டு போகமுடியாது. ஆனால் நமது செல்வத்தைமற்றவர்களுக்குப் பயன்படச் செய்து அதனால் ஏற்படும்புண்ணியம் இருக்கிறதே அதை எடுத்துக் கொண்டு போகமுடியும்.

ஜோன்நியூட்டன்என்று ஒருவர் இருந்தார். அவர் நான் எப்பொழுதாவது சொர்க்கத்துக்குப் போய்ச் சேர்ந்தேன் என்றால் மூன்று அதிசயங்களைப் பார்ப்பேன் என்றார். என்னஎன்று கேட்டார்கள். நான் யார் யார் அங்கு இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேனோ அவர்களில் சிலர் அங்கு இருப்பார்கள் என்றார். இரண்டாவதுஅதிசயம் அங்கே இருப்பார்கள் என்று எதிர்பார்த்தசிலர்அங்கே இருக்க மாட்டார்கள்!மூன்றாவது அதிசயம் என்ன?. என்றுகேட்டார்கள் நான் அங்கு இருக்கிறேன் என்பது தான் மூன்றாவது அதிசயம்! என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# தேர்தல் முறைமைகளில் விரைவில் மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியம்

## தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவிப்பு

முறைமைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தல் வேண்டும் என்று பல தடவைகள் அறிவுறுத்திய போதிலும் அது தொடர்பில் இதுவரையிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் என்ற நம்பிக்கையும் இல்லை. ஆனாலும் தேர்தல் முறைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்து வது அவசிய மானதாகும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

தேர்தல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

2004ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பிற்கு அமைவாகவே தேர்தல்கள் நடத்தப்படுகின்றன என்பதனால் அதற்கு பின்னர் விண்ணப்பித்தோரின் பெயர்கள் இந்த இடாப்பில் உள்ளடக்கப்படவில்லை. தேர்தல்கள் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக நடத்தப்படுவதில்லை. என்பதனால் தேர்தல்கள் திணைக்களம் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

தேர்தல்கள் திணைக்களத்தில் 525பேர் கடமையாற்றுகின்றனர். இன்னும் 32பேருக்கு பற்றாக் குறை நிலவுகின்றது. அவற்றை பூர்த்திசெய்யுமாறு கோரியிருந்த போதிலும் இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்



படவில்லை. இதனால் அனுராதபுர மாவட்ட வாக் காளர் அட்டைகளை ரஜரட்ட பல்கலைக் கழக மாண வர் களை கொண்டே பூர்த்தி செய்ய வேண்டிய தாயிற்று என்றார். (அ)

# அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையளிப்பதாக அமையவில்லை

## பிரி.ராஜாங்க அமைச்சரிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு

(கொழும்பு)

இலங்கை தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு அர்த்தமுள்ள அரசியல் தீர்வினைகாணும் விதத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள்



அமையவில்லை. அரசின் தற்போதைய நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை யளிப்பதாக இல்லை என்று இலங்கை வந்துள்ள பிரித்தானிய வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் மலொக் பிறவுணிடம் தமிழ் தேசியக் கூட்மைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரித்தானிய ராஜாங்க அமைச்சரை கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத்தில் நேற்று முன்தினம் மாலை சந்தித்து சுமார் 40நிமிடங்கள் சம்பந்தன் எம்.பி. பேச்சு வார்த்தை நடத்தினார். இந்த பேச்சுவார்த்தையின் போது சம்பந்தன் எம்.பி. மேலும் எடுத்துக் கூறியதாவது,

பல்லின, பல்கலாசார, பல் சமய மக்கள் வாழுகின்ற நாடு என்பதை ஏற்றுக்கொண்டு அரசியல் தீர்வு யோசனை ஒன்றை முன்வைக்கும் எண்ணத்துடன் இலங்கை அரசாங்கம் செயற்படவில்லை. பெரும்பான்மை இனத்தின் நாடு இலங்கை என்ற நிலைப்பாட்டில்தான் அரசாங்கம் செயற்பட்டு வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இதனால் அரசியல் தீர்வு ஒன்றைக் காணக் கூடிய வாய்ப்பு அரிதாகவே தென்படுகின்றது.

இராணுவ நடவடிக்கையிலேயே அரசாங்கம் இன்று முழுமையாக ஈடுபட்டுள்ளது. பேச்சுவார்த்தைக்கு செல்லாமல் இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளை பலவீனப் படுத்த வேண்டும் என்ற முழுமுயற்சியில் தான் அரசாங்கம் தீவிரம் காட்டி வருகிறது. இதனை எவரும் மறுக்க முடியாது.

சர்வகட்சி மாநாடு மூலம் ஒன்றுமே அடைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அர்த்தமுள்ள அரசியல் தீர்வு ஒன்றை அடையும் முயற்சியில் சர்வகட்சி மாநாடு தோல்வி கண்டுள்ளது.

மனித உரிமை மீறல் தொடர் கதையாக மாறியுள்ளது. இவ்வாண்டு ஜனவரியிலிருந்து இத்திகதி வரை 90க்கும் அதிகமானோர் காணாமற் போயுள்ளனர் என்று முறைப்பாடுகள் வெளியாகியுள்ளன. அரசின் போர் நடவடிக்கை தீவிரமடைந்து வருவதால் வன்னிப் பிராந்தியத்திலிருந்து ஆயிரக்கணக்கில் தமிழ்க் குடிமக்கள் இடம்பெயர்ந்து நிர்க்கதி நிலைக்கு ஆளாகியுள்ளனர். அவர்கள் தமிழ் மக்கள் என்ற காரணத்தினால் அரசாங்கம் ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்காது இருக்கிறது என்றார். (அ)

# இராசிபலன்

18.07.2008

(ஆடி 03, வெள்ளிக்கிழமை)

பூரணை பிற்பகல் 02.09 மணிவரை

உத்தாடம் பிற்பகல் 5.56 மணிவரை

இராகுகாலம் 10.31-12.01 மணிவரை

சுபநேரம்-06.01-07.31 மணிவரை

பூரணை விரதம்

| | |
|---|---|
| மேடம் | அதிக பிரயாசை, காரிய நன்மை, சுபநிகழ்வு, தூரதேசச்செய்தி. |
| இடபம் | ஆன்றோர்மதிப்பு, உடல்உழைப்பு, அச்சமான நிலை. |
| மிதுனம் | ஆரோக்கியக்குறைவு, வீண் பகை, முயற்சி தடங்கல். |
| கடகம் | தெய்வதரிசனம், அபூர்வசந்திப்பு, கலந்துரையாடல், காரியஅனுகூலம். |
| சிங்கம் | சுகவாழ்வு, திடீர் பயணம், பணவருவாய், உறவினர் சந்திப்பு. |
| கன்னி | மரியாதைக்குறைவு, முயற்சி தாமதம், குடும்பக்கவலை. |
| துலாம் | தன்னம்பிக்கைக்குறைவு, கல்வியில் ஆர்வம், ரோகநிலை. |
| விருச்சிகம் | வாக்குமேன்மை, அன்னியர் சந்திப்பு, பொருள்சேர்க்கை. |
| தனுசு | பணக்குறைவு, தொழில் மந்த நிலை, மரியாதைக்குறைவு. |
| மகரம் | ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், பெரியோர் சந்திப்பு, தெய்வதரிசனம். |
| கும்பம் | பிதாசிந்தை, கோபப்படுதல், பணவிரயம், திடீர்பயணம். |
| மீனம் | தெய்வதரிசனம், தொழில் நன்மை, மனமகிழ்ச்சி, காரியநன்மை. |

வளவன்

# பொதுமக்களில் ஆயிரத்துக்கு ஒருவர் ஆயுதங்களை வைத்துள்ளனர்

உலகளாவிய ரீதியில் பாரிய அளவிலான சிறு ஆயுதங்கள் மக்கள் மத்தியில் புழக்கத்தில் உள்ளதாக சுவிட்ஸர்லாந்தின் நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் ஆயு தத் தவிர்ப்பு மாநாடு என்ற இந்த அமைப்பு இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி, உலகத்தில் ஆயிரம் பேருக்கு ஒருவர் என்ற அடிப்படையில்மக்கள் ஆயுதங்களை வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொலைக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் திருடப் பட்ட ஆயுதங் கள் போன்றவையே இவ்வாறு மக்கள் மத்தியில் புழங்குவதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதனைத்தவிர பாரிய ஆயுத உற்பத்திகளுக்கு அப்பால் , தமிழீழ விடுதலைப்புலிகள், கொலம்பியப்போராளி இயக்கம் போன்றவற்றின் சுய ஆயுத உற்ப த்திக ளை யும் இந்த ஆயுதப் புழக்கம் என் றபட் டியலில் சுவிஸ் நிறுவனம் சுட்டி க்காட்டியுள்ளது.

எனினும் ஆயுதப் புழக்கத்தைத் தடுக்கும் முறைகளில் பாரிய தடைகள் உள்ளமையால் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான ஏதுநிலைகள் இல்லை எனச் சுவிஸ் நிறுவனத்தின் ஆய்வுப் பிரிவு முகாமையாளர் கெய்த் கெரோஸ் தெரிவித்துள்ளார். (அ-5)

# தமிழக மீனவர்களைக் காப்பாற்றுமாறு கம்யூனிஸ்ட் கட்சி கருணாநிதியிடம் கோரிக்கை

இலங்கைக் கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கைக் கடற்படையினரின் தாக் குதல்களுக்கு உள்ளாவதை நிறுத்த உடனடி நடவடிக்கைகளை எடுக்கு மாறு மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்ட் கட்சி யின் மாநிலச் செயலாளர் என் வரத ராஜன் தமிழக முதல்வர் கருணா நிதியை நேரடியாகச் சந்தித்து வலியுறுத்தி யுள்ளார்.

வரதராஜன் உள்ளிட்ட மார்க்கசிஸ்ட கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கள் தமிழக முதல்வரை அவரது வீட்டில் சந்தித்துப் பேசியிருக்கின்றனர். இலங்கைக் கடற்பரப்பில் தமிழக மீனவர்களின் பாதுகாப் புக்கு உரிய நடவடிக்கைகளை எடுக் குமாறு இந்தச் சந்திப்பில் மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தமிழக முதல்வரை வலியுறுத்தியுள்ளனர். (அ)

# சார்க் - பாதுகாப்பு ந வடிக்கைகளினால் தமிழ் மக்கள் மீது அநாவசிய கெடுபிடிகள்

பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் (சார்க்) உச்சி மாநாடு இன்னும் இரு வாரங்களில் நடைபெறவிருப்பதை முன்னிட்டு தலைநகர் கொழும்பிலும் புறநகர் பகுதிகளிலும் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் விளைவாக மக்கள் எதிர் நோக்கவேண்டியிருக்கும் வீண் சிரமங்கள், அநாவசிய கெடுபிடிகள் குறித்து அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டியது எமது கடமையாகும்

வடக்கு கிழக்கில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதிகளைக்கொடுக்க வேண்டாமாமென்று கொழும்பில் உள்ள பல விடுதிகளின் உரிமையாளர்களைப் பொலிசார் அறிவுறுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

அதேவேளை வடக்கு கிழக்கில், இருந்து வரும் மக்களுக்குத் தங்குமிட வசதிகளைக் கொடுப்பதற்கு முன்னதாக அவர்களிடம் சொந்த இடங்களின் கிராம சேவகர்களினால் வழங்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரம், பொலிஸ் பதிவு போன்ற ஆவணங்களைச் சில விடுதி உரிமையாளர்கள் கோருவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

கொழும்புக்கு வந்து சேர்ந்த பின்னர் தான் விடுதிகளில் தங்குவதற்குக் கிராமசேவகர்களின் அத்தாட்சிப்பத்திரமும்பொலிஸ்பதிவும் தேவைப்படுவதாகத் தங்களுக்கு தெரியவருவதாக அந்தமக்கள்கூறுகின்றார்கள்.

கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறையில் இருக்கும் இன்றைய காலகட்டத்தில் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து தலைநகருக்கு வந்து தங்குபவர்கள் பற்றிய முழுமையான விபரங்களை சம்பந்தப்பட்ட விடுதி உரிமையாளர்கள் தெரிந்து வைத்திருப்பதிலோ அல்லது அவர்களைப் பற்றிய விபரங்களை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களைக் கோருவதிலோ தவறு ஏதுமில்லை.

ஆனால், அத்தகையதொரு நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பொலிஸாரிடமிருந்து முறைப்படியான அறிவுறுத்தல் விடுக்கப்படாத பட்சத்தில் அந்த மக்களை வீண் தொல்லைகளுக்கு உட்படுத்துவது தவறேயாகும். தவறு மட்டுமல்ல; சட்டவிரோதமானதுமாகும்

இன்றைய இடர்மிக்க காலகட்டத்திலே வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மிகவும் அத்தியாவசியமான தேவைகளுக்காகவே தலைநகருக்கு வருகிறார்கள்.

இவர்களில் யாருமே உல்லாசப் பயணத்தை மேற்கொண்டு கொழும்பு வருவதில்லை குறிப்பாக வடபகுதிமக்கள் கப்பல் மூலமாக அல்லது விமான மூலமாகவே கொழும்புக்கு வரமுடியும். விமானத்தில் கொழும்பு வந்து போவதற்கு ஒரு வடபகுதி பயணி 20ஆயிரம் ரூபாவை கட்டணமாக செலுத்த வேண்டும். கொழும்பில் இருந்து விமானத்தில் தென்னிந்தியாவுக்கு சென்று வருவதற்கு கூட இந்தளவு பணம் வேண்டியது இல்லை.

பெருஞ்சிரமங்களுக்கு மத்தியில் அத்தியாவசிய அலுவல்களுக்காக வடக்குக் கிழக்கில் இருந்து வருகின்ற அப்பாவி மக்கள் கொழும்பில் தங்குகின்ற காலகட்டத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் பொதுவான விதிமுறைகள் கூட வகுக்கப்படுவது இல்லை.

இடத்துக்கு இடம் வித்தியாசமான நடைமுறைகளை பொலிஸார் கடைப்பிடிப்பதை காணக்கூடியதாக இருக்கிறது தற்போது தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் தலைநகரின் குறிப்பிட்ட சில பகுதிகளில் உள்ள விடுதிகளில் தங்கியிருக்கும் வடக்குக் கிழக்குவாசிகளை அங்கிருந்து வெளியேறி விடுமாறு பொலிஸார் நெருக்குதல் கொடுப்பதாகவும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இது தொடர்பாக மேலும் விபரங்களைச் சேகரித்து வருவதாக மக்கள் கண்காணிப்புக்குழுவின் ஒழுங்கமைப்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்திருக்கிறார்.

இது இவ்வாறிருக்க வீதிச் சோதனை நிலையங்களில் கடமையில் ஈடுபட்டிருக்கும் பொலிஸாருக்கும் படையினருக்கும் மக்களைச் சோதனை செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் ஒரே மாதிரியான அறிவுறுத்தல்கள் விடுக்கப்படவில்லை என்றே கருதவேண்டி இருக்கிறது.

அவர்கள் தங்கள் மனம் போன போக்கில் மக்களிடம் குறிப்பாக தமிழர்களிடம் ஆவணங்களை கோருவதை காணக்கூடியதாக இருக்கிறது.

பொலிஸ்பதிவு ஆவணத்தை தமிழர்கள் தங்களுடன் எப்போதுமே கொண்டு திரிய வேண்டும் என சில படையினர் வற்புறுத்துகிறார்கள்.

அதனால் சில சோதனை நிலையங்களில் தமிழர்கள் வீண் தொல்லைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட இடத்தில் தங்கி இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான பொலிஸ் பதிவு ஆவணத்தை மக்கள் தங்களுடன் எப்போதுமே எடுத்துச்செல்ல வேண்டும் என்று எந்தவிதமான அறிவுறுத்தலுமே பொலிஸ் திணைக்களத்தினால் உத்தியோக பூர்வமாக விடுக்கப்படவில்லை.

ஆனால் பயணத்தின் இடைநடுவில் திடீர் என்று பொலிஸ் பதிவை மக்களிடம் பொலிஸாரும் படையினரும் கோரும்போது அவர்கள் அந்தரப்படவேண்டியிருக்கிறது.

வடக்கு கிழக்குப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தொழில் நிமித்தம் பல வருடங்களாக தலைநகரில் வசிக்கும் பட்சத்தில் அவர்களின் தேசிய அடையாள அட்டையை புதுப்பித்திருக்கவேண்டும் என்றும் படையினர் சில சந்தர்ப்பங்களில் வற்புறுத்துகிறார்கள்.

வடக்கிலோ கிழக்கிலோ பிறந்த ஒருவர் கொழும்பில் வாழ்வதாக இருந்தால் தேசிய அடையாள அட்டையை புதுப்பிக்க வேண்டும் என்று சட்ரீதியானதேவைஇருக்கிறதா? சோதனை நிலையங்களில் கடமையில் ஈடுபட்டிருக்கும் ஒரு பொலிஸ்உத்தியோகத்தருக்கோ அல்லது படைவீரருக்கோ எழுந்தமானத்தில் தோன்று கின்ற சந்தேகத்தினால் அப்பாவிகள் கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

உரிய முறையில் படையினருக்கும் பொலிஸாருக்கும் ஒரே மாதிரியான அறிவுறுத்தல்கள் விடுக்கப்படாதமையே இந்தப் பிரச்சினைக்குக் காரணமாகும்.

பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொறுத்தவரை, முன்னைய அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சாதாரண மக்களுக்கு வீண் தொல்லைகளை ஏற்படுத்தாத நடைமுறைகளைஅரசாங்கம் வகுக்கவேண்டுமென்ற எதிர்பார்ப்பிலேயே இந்தப் பிரச்சினைகளை இங்கு சுட்டிக்காட்ட நிர்ப்பந்திக்கப்படுகின்றோம்.

*நன்றி: இணையத்தளம்.* (அ)

## இந்தியாவுடனான பொருளாதார ஒப்பந்தம் தொடர்பாக மேலும் ஆராய வேண்டும்

## அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை-இந்திய பொருளாதார பங்குடமை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் அது தொடர்பாக மேலும் ஆராயப்பட வேண்டும் என கடந்த புதன்கிழமை அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம், முதலீடு மற்றும் சேவைத்துறைகளை மேலும் விருத்திசெய்வது தொடர்பிலான இந்த ஒப்பந்த வரைவினை இலங்கையும் இந்தியாவும் ஏற்கனவே பூர்த்திசெய்துள்ள நிலையிலேயே இலங்கை அமைச்சரவை அது தொடர்பில் மேலும் ஆராயவேண்டுமெனக் கூறியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் உள்ள சில பிரிவுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களுக்கு வித்தியாசமான வழிகளில் அர்த்தங்கள் உள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர்கள் இது குறித்து மேலும் ஆராயப்பட வேண்டியதன் அவசியத்தை இங்கு வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகல்லாகம ஆகியோரே இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தில் காணப்படும் ஆதரவானதும் எதிரானதுமான காரணிகள் குறித்து ஆராயப்படவேண்டும் எனவும் அதற்கு முன்னர் இது தொடர்பில் அவசரமாக எந்த வித தீர்மானங்களும் எடுக்கப்படக் கூடாது எனவும் அமைச்சரவையில் கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்த ஒப்பந்தம் வெளிப்படைத் தன்மையற்றது எனவும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து தமக்குத் தெரியப்படுத்தவேண்டும் எனவும் வர்த்தக சமூகத்தினர் அமைச்சரவைக் கூட்டத்திற்கு முன்னர் வலியுறுத்தியிருந்தனர்.

அத்துடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவது தொடர்பில் தேசிய சுதந்திர முன்னணியும் ஜாதிக ஹெலஉறுமயவும் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி 'சுப்பர் -6' சுற்றுக்கு முன்னேறியது

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளிற்கிடையிலான 15வயதுப் பிரிவிற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி தான் விளையாடிய மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்று 'சுப்பர்-6' சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

18 பாடசாலைகள் பங்கு பற்றிய இச் சுற்றுப் போட்டி 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. கரவெட்டி விக்னேஸ்வரா, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் ஒரு பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஹாட்லிக் கல்லூரியை 6 விக்கெட்டுக்களாலும் உடுப்பிட்டியை 19 ஓட்டங்களாலும் மானிப்பாய் இந்துவை 4 விக்கெட்டுக்களாலும் விக்னேஸ்வராக் கல்லூரி வெற்றி கொண்டது.

நாளை சனிக்கிழமை நெல்லியடி ம.ம. வித்தியாலய மைதானத்தில் மகாஜனாவை எதிர் கொள்கிறது கரவெட்டி விக்னேஸ்வரா.

மானிப்பாய் இந்துக் கல்லூரியுடனான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் 43.1 ஓவரில் சகல விக்கெட்டையும் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெல்சின் 24, சுமன்-18, ஜனலிந்தன்-13 ஓட்டங்களைப் பெற்றனர். அனுசான் மற்றும் நிதர்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்களை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி 30.3 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 134 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

அணித்தலைவர் திவாகர் 25, ஆதவன் 21, ரஜீவன் ஆட்டமிழக்காது 19 ஓட்டங்களைப் பெற்றனர். யாழினியன் 2 விக்கெட்களை வீழ்த்தினார் இதன் மூலம் விக்னேஸ்வரா அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பு பிரகாசமாகவுள்ளது. (அ)


## அரசாங்க அறிவித்தல்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## பகிரங்க ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு சொந்தமான பின்வரும் காகிதாதிகள் பொருட்கள் யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. இப் பொருட்கள் 31.07.2008ஆம் திகதி 10.00 மணிக்கு யாழ்.வலயகல்வி அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

| இல | பொருள் | இருப்பில் உள்ள எண்ணிக்கை |
| --- | --- | --- |
| 01 | பிறிஸ்ரல் அட்டை (Bristol Board) | 5440 தனி |
| 02 | கலர் பென்சில் (Colour Pencil) | 184 பெட்டி |
| 03 | வரைதல் கொப்பி (Drawing Book) | 292 தனி |
| 04 | அழிரப்பர் (Eraser) | 51050 தனி |
| 05 | பிசின் (Binder Cum) | 289 தனி |
| 06 | வரைபட கொப்பி (Graph Book) | 44 தனி |
| 07 | பென்சில் (Pencil) | 66470 தனி |
| 08 | பேனை (Pen) | 12265 தனி |
| 09 | பெயின்ரின் ஸ்ரிக் (Painting Stick) | 6958 தனி |
| 10 | அடிமட்டம் (Ruler) | 2453 தனி |
| 11 | Oil Chalk | 1216 தனி |
| 12 | கணித உபகரணம் (Mathematical Box) | 32 பெட்டி |

பொருட்களை பார்வையிட விரும்புவர்கள் அரச வேலை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரை வலயகல்வி அலுவலக கணக்காளருடன் தொடர்பு கொண்டு பொருட்களை பார்வையிடலாம்

ஏல விற்பனை பெறுபேற்றின் பிரகாரம் பொருட்களை பெற்றக்கொள்பவர்கள் மாவட்டச் செயலக இலங்கை வங்கி கிளையில் உரிய பணத்தை உடனடியாக செலுத்தி பொருட்களை உடனடியாக களஞ்சியத்தில் இருந்து அகற்ற வேண்டும். ஏல விற்பனை சபையின் முடிவே இறுதியானது.

க.கணேஷ்
அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்.

(C-1337)

# நோத்முதல் கோபல்லவா வரை (40)

### ஓர் எதிர்க் கிளர்ச்சி

இதற்குள் இந்தியாவிலிருந்து ஆங்கிலேயருக்கு உதவியாகப் படைகள் வந்தனர். அப்படைகள் கண்டி நாட்டின் நாலா பக்கங்களிலும் பரவி ஆங்காங்கு வீடுகள், வயல்கள், கடைகள், கட்டடங்கள் என்பவற்றை நெருப் பிட்டுஅழித்தும், வழியில் கண்ட நின்ற பொது மக்களை வெட்டிக் கொன்றும்சுட்டுக் கொன்றும் அசுர வேலைசெய்தனர். மேலும் கலகத்தை ஆதரித்த தலைவர்களின் மனைவி மக்களை இரக்கமின்றித் தண்டித்தும்பழிவாங்கினார்கள். பழியொன்றும் அறியாத பாமர மக்களிடத்தும் படைகள் பாதகச் செயல்களைச் செய்தார்கள். நாட்டிலிருந்த ஆயுதங்கள்எல்லாவற்றையும்பறிமுதல்செய்தும் உணவுப்பொருள்களைச் சூறையாடியும் பொது மக்களைத் துன்புறுத்தி னர்.

இந்தியாவிலிருந்து மேலும் படைகள் வந்தனர். இலங்கையிலும் விசுவாசமுள்ள இடங்களில் படை திரட்டினார்கள். படைகள் செய்த சித்திரவதைகளைத் தாங்க இயலாமல் கலகத்தில் ஈடுபட்டவர்கள்பலர்மனைவி மக்களைப் பணயமாகவும், உணவுப் பொருட் களைக் கப்பமாகவும் ஆங்கிலேயருக்குக் கொடுத்துச் சரணடைந்தார்கள். கண்டியர் தங்கள் பழைய காலத்து ஆயுதங்களைக் கொண்டு வலிமை வாய்ந்த ஆங்கிலப் படைகளை நிரந்தரமாக வெற்றிகொள்ள இயுலவில்லை. ஆங்கிலேயருக்கு மேலும் மேலும் படைகள் இந்தியாவிலிருந்து வந்தனர்.

ஆங்கிலேயருடைய படைகள் வெற்றிக ரமாக உள் நாடுகளுள் புகுந்து கலகக்காரரையும் காடுகளில் இருந்த அவர் தம் குடும்பங்களையும் பணியவைத்தனர். நாறன் கோவா என்ற இடத்தில் கெபிற்றிபொலவின் குடும்பத்தை ஆங்கிலேயர் கைதுசெய்தனர். இதற்குள் ஊவா,வெல்லசா ஆகிய கலக உற்பத்தி நாடுகள் கைப்பற்றப்பட்டன. இப்போது மாத்தளை, தும்பறை, நுவரகலாவிய ஆகிய இடங்களிலேதான் கலகம் நிலவுவ தாயிற்று.

இந்நிலையில் கலகத்தின் மூச்சுக்குறைய ஆரம்பித்தது. தலைவர்களிடையே அபிப்பிராய பேதமேற்பட்டது. கண்டியரசன் எனத் தாங்கள் கொண்டு திரிந்த துரைச்சாமி உண்மையில் தமிழனுமல்ல இராசவம்சத்தவனுமல்ல என்றும், உண்மையான துரைச்சாமி மதுரையி லே இருந்தான் என்றும் போலித் துரைச்சாமி முன்னர் புத்த பிக்குவாயிருந்த வில்லபா என்றும், அவன் ஏழு கோறளை வாசி என்றும் எல்லோரும் அறிந்துகொண்டனர்.

### மீன் பார்வை

இதற்குள் பிலிமைத் தலாவை மன்னாரிலிருந்து வீரவாகு என்ற ஒரு தமிழ் இளைஞனைக் கண்டி மன்னன் எனப் பிரகடனஞ் செய்து கொண்டமையால் ஏனைய தலைவர்கள் கூற்றும் இவன் கூற்றும் பொய்யாயின. தும்பறை, மாத்தளை ஆகிய இடங்களை ஆங்கிலே யர் கைப்பற்றிக் கொண்டமையால் கலகத் தலைவர்கள் நுவரகலாவியாவில் மறைந்திருந்தனர். இவர்களிருப்பிடத்தை அறிந்த ஆங்கிலேயர் இவர்களைப் பின்தொடர்ந்து சென்று பிலிமையையும் கெபிற்றிபொலவையும் 28.10.1818 இல் பரவககம என்ற ஊரில்கைப்பற்றினர். மடுகல்லை அவ்விடத்தை விட்டு மறைந்தானேனும் அவனை ஆங்கிலேயர் 1.11.1818 இல் கைப்பற் றினர். கலகத் தலைவர்களுள் கிவுலேகெதர என்பான் அகப்படாமல் ஓடிமறைந்தான் எனினும் அவன் பிச்சைக்காரன் வேடத்தில் விந்தனை வேடர் மத்தியில் சிறைசெய்யப்பட் டான். பிலிமைத்தலாவை மன்னன் எனப்பிரகடனஞ்செய்தவீரவாகுவை பிளாக்கவுஸ் என்ற சுங்க அதிகாரி மன்னாரில் சிறை செய்தமையோடு கலகக்கார ரின் தலைவர் எல்லோரும் அகப்படுத்தப்பட்டனர்.


இவ்வாறாகச் சற்றேனும் எவரும் எதிர்பாராத வண்ணம் 2.11.1818 இல் புத்தரின் புனிதப்பல்லு ஆங்கிலேயரின் கைக்கெட்டியது. அதனை அறிந்த பொதுமக்கள் ஆங்கிலேயரே தங்களை ஆளவேண்டியவர்கள் என உணரத் தொடங்கினர். அவர்களுடைய சம்பிரதாயப்படி புத்தரின் புனிதப் பல் யார் கையில் இருக்கிறதோ அவரே ஆள உரிமை உள்ளவர் என்பதாகும். எனவே கலகம் ஓய்ந்து அமைதி நிலவுவதாயிற்று. ஆகவே ஆங்கிலேயர் முன்னர் பிரகடனஞ் செய்த இராணுவ ஆட்சியை 21.11.1818 இல் மாற்றுத்தாவு செய்தார்கள். எனினும் அதன் நீக்கம் 11.11.1820 வரையில் தான் ஏற்பட்டது.

இப்போது கிளர்ச்சியாளர் தலைவர்கள் எல்லோரும் யுத்தகாலக் கைதிகளாயினர். எகிலப்பொல முதலில் விசாரிக்கப்பட்டுச் சிரச் சேதஞ் செய்யப்பட்டான். கெபிற்றிப்பொல, மடு கொல்ல, பிலிமைத்தலாவை, இபகம முதலானோர் விசாரிக்கப்பட்டுக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டனர். இவர்களுள் கெபிற்றிப்பொலவும் மடுகொல்லவும் கொலைத்தண்டனை பெற்றனர். ஏனையோ



ரின் குற்றங்கள் கொலைத்தண்டனைக்கு உரியன வல்ல எனக் கண்டபின் அவர்கள் மோறிற்றஸ் தீவுக்கு நாடு கடத்தப்பட்டனர். கலகத்தில் பங்கெடுத்த வேறு கிராம அதிகாரிகள் பலரும் மோறிற்றஸ் தீவுக்கு அனுப்பப்பட்டார்கள். இங்ஙனமாகக் கலகங் காரணமாக நடைபெற்ற படை மன்றினால் எல்லாமாக 47 தலைவர்கள்தண்டனைக்காளானார்கள். இவருள் 28பேர் கொலைத்தண்டனையும், 10பேர் நாடுகடத்தலும், 8பேர் மன்னிப்பும் பெற் றனர். ஒருவர் இயற்கை மரணம் எய்தினர். கலகத்தில் பங்கெடுதத புத்தபிக்குகள் யாழ்ப்பா ணக் கோட்டைக்குள் சிறையிடப்பட்டார்கள். உரிய காலத்தில் ஆங்கிலேயரிடம் மீண்டு ச ரணடையாத 75 தலைவர்களின் காணி பூமிகள் பறிமுதலாக்கப்பட்டன. இந்தியப் படைகள் நாளடைவில் இலங்கையை விட்டுப் போனபோதும் அவர்களால் இலங்கை அரசாங் கத்துக்கு 232675 பொன் செலவாயிற்று என்பர். (தொடரும்)

**க.சி.குலரத்தினம்**



சென்பற்றிக்ஸ் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த புதன்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வைத்தியஅதிகாரி நீகல் இராஜேந்திரா உரைநிகழ்த்துவதையும், பிரதமவிருந்தினர் மாணவருக்கு பரிசில் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:கவி)

# எதிர்கால நோக்கில் ஆரம்பக்கல்வி

யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்களின் நினைவுப் பேருரையில், யாழ்.பல்கலைக்கழக கல்வியியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) ஜெயலட்சுமி இராசநாயகம் அவர்கள் ஆற்றிய "எதிர்கால நோக்கில் ஆரம்பக் கல்வி" என்ற விடயம் வாசகர் நலன்கருதி இங்கு தரப்படுகின்றது.

(ஆ-ர்)

இலங்கையைப் பொறுத்த வரையில் முறைசார்ந்த கல்வியின் முதற் கட்டமாக அமைவது தரம் 1தொடக்கம் 5வரை உட்பட்ட வகுப்புகளாகும். நிறுவன அமைக்குட்பட்டு முறையான கல்வி பயிலத் தொடங்கும் நிலை ஆரம்பக் கல்விப் பருவமாகும். இங்கு சராசரியாக ஐந்து ஆண்டுகள் மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள்.

கற்றலுக்கு அடிப்படையாக உள்ள வாசிப்பு, எழுத்து, எண்கணிதம் ஆகிய (3R's-Reading, Writing, Arithmetic) பாடங்கள் இக் கட்டத்தில் முக்கியம் பெறுகின்றன. அத்தோடு சூழலறிவு, சமூக அறிவு, சுகாதார அறிவு, அடிப்படை விஞ்ஞானம், உடற் கல்விச் செயற்பாடுகள் போன்ற பாடங்களும் மாணவரின் கற்றல் அனுபவங்களுக்குப் பொருத்தமான பாடங்களாக அமைகின்றன. ஆரம்பக்கல்வி எல்லா மாணவர்களுக்கும் இலவசமாகவும் கட்டாயமாகவும் அளிக்கப்பட வேண்டும் என்பது இன்றைய கல்விக் கொள்கையாகும். இத்தகைய கட்டாயக்கல்வி செயற்பாடுகளை அமுல்படுத்திய பல நாடுகளில் பிள்ளை களைப் பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோருக்குத் தண்டனைகள் உண்டு. இலங்கையைப் பொறுத்த வரையில் கல்வி தொடர்பான விழுப்புணர்வை பெற்றோர் மத்தியில் ஏற்படுத்துவதோடு பெற்றோர்கள் பிள்ளைகளுக்கான ஊக்குவிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலவசக்கல்வி, இலவச நூல், இலவசச் சீருடைகள் மதிய உணவு, கற்பித்தல் உபகரணங்கள் போன்றவற்றை வழங்குதல் மூலம் பிள்ளைகள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

கல்விக்கு வறுமையும் ஒரு தடைக்கல்லாக அமைந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. சில சமூகங்களில் உள்ள குடும்பங்கள் இன்று வறுமையில் இருந்து மீள முடியாமல் உள்ளனர். இதனால் சில அரச சார்பற்ற நிறுவனங்களும் இத்தகைய கற்றல் செயல்பாடுகளுக்கான ஊக்குவிப்பை சில நடவடிக்கைகளினூடாக மேற்கொண்டு வருகின்றன. பிள்ளைகள் எல்லோரும் ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாகக் பெற வேண்டும் என்னும் குறிக்கோளுடனும், உயர்படிப்பிற்கு இக்கல்வி ஆதாரமாக இருப்பதனாலும் இன்று எல்லா நாடுகளிலும் இது முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அரசு தனது நாட்டு மக்களுக்கு இலவசக் கல்வியை வழங்கி வருகின்றது. இதனால் எழுத்தறிவு வீதம் 90% ஆக வளர்ச்சியடைந்துள்ளது.

இலங்கையின் ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கு வெளிநாடுகளின் உதவியும், நன்கொடைகளும் கிடைத்துள்ளன. அரசின் பங்களிப்பும், அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பும், வெளிநாடுகளின் பங்களிப்பும், இலங்கையின் ஆரம்பக் கல்வி வரலாற்றின் வளர்ச்சிக்குக் காரணிகளாக அமைந்துள்ளன. இத்தகைய சாதகமான சூழல் ஆரம்பக் கல்வியில் விசேட கவனம் செலுத்துவதற்கு முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன எனலாம்.

### ஆரம்பக் கல்வியும் குறிக்கோள்களும்

கல்வி என்னும் கருமத் தொடரானது சகல சமூகங்களின் வளர்ச்சிக்கும் சிறப்பான எதிர்காலத்திற்கும் அடித்தளமிடுகின்றது. ஆரம்பக் கல்வியானது ஒரு பிள்ளை யின் வாழ்நாள் பூராகவும் வியாபிக்கும் கல்வி முயற்சிக்கு வித்தாகின்றது. ஐந்து வயதைப் பூர்த்தி செய்தபிள்ளையொன்று ஆரம்பக் கல்வியின் வாயிலான தரம் ஒன்றிற்குள் பிரவேசிக்கின்றது. அது தனது பெற்றோரின் அரவணைப்பிலிருந்து பிரிந்து பழக்கமற்ற புதிய சூழலொன்றுடன் தன்னைப் பொருத்திக் கொள்கிறது.

ஆரம்பக் கல்வியில் முதலிடுவதென்பது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த செயலாகக் கருதப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆரம்பக்கல்விப் பருவத்தின் போது தனக்குத் தேவையான அறிவை யும், திறன்களையும் ஒரு பிள்ளை சரிவரப் பெறத் தவறிவிட்டால் அக் கல்விச் செயற்பாட்டில் எதுவித பயனுமில்லை.

ஒரு பிள்ளையினுடைய கற்றற் செயற்பாட்டிலும், ஆளுமை விருத்தியிலும், மொழி வளர்ச்சியிலும் அப்பிள்ளையின் வாழ்க்கையின் முதல் ஐந்து வருடங்களும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காலப் பகுதியாகும். இக் கால கட்டத்தில் பெறுமதி வாய்ந்த கல்வி இலக்குகளை அப்பிள்ளை பெற்றிருத்தல் வேண்டும் எனப்பட்டது. (தொடரும்)

இன்று
உதைபந்தாட்ட நாயகன் அமரர் தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம் அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவாக
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும்
உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி -2008
♦ பருத்தித்துறை ஐ.வி.க. எதிர் திக்கம் இளைஞர்
♦ நியூட்டன் எதிர் கலைவாணி
மைதானம்:வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுத்திடல்

# தரம் -5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் 9

பகுதி-II
நேரம்–1மணி 15 நிமிடம்

வலம்புரி ஆசிரியர் குழு

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**

*இப் பகுதியை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

நீண்டு உயர்ந்து வளரும் தென்னை மரமானது எமக்கு மிகவும் பிரயோசனமான மரங்களில் ஒன்றாகும்.தேங்காய் ,தென்னைமட்டை, தேங்காய்த்தண்ணீர், சிரட்டை, தென்னோலை, தண்டு, ஈர்க்கு ஆகிய தென்னையின் சகல பகுதிகளுமே மனிதஇனத்துக்குப் பெரிதும் பயன் படுகின்றன. தட்டு, பெட்டி, பாய் போன்றவற்றை இழைத்தல், எரிபொருளாகப் பயன்படுத்தல், அலங்காரப் பொருட்கள்செய்தல் என்பன தென்னை மரத்தின் சிறந்த பயன்பாடுக ளாகும்.

1. தென்னை மரமானது எப்படி வளரும்?
......................................................................
2. எந்தப்பகுதியில் தென்னை மரம் செழித்து வளரும்?
......................................................................
3. தென்னை மரத்திலிருந்து பெறும் பொருட்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
......................................................................
4. தேங்காய்த் தண்ணீர் என அழைக்கப்படுவது எது?
......................................................................
5. தென்னோலையால் செய்யப்படக்கூடிய இரு பொருட்களின் பெயர்களைத் தருக?
......................................................................
6. ஈர்க்கினால் செய்யப்படக்கூடிய வீட்டுக்குப் பயன்படக்கூடிய உபகரணம் ஒன்றை எழுதுக?
......................................................................
7. மேலுள்ள பந்தியிலிருந்து அடைமொழிச் சொல் ஒன்று தருக?
......................................................................
8. வினை அடைமொழிச்சொல் ஒன்று தருக?
......................................................................

***பின்வருவனவற்றில் தென்னையின் பாகங்களிலிருந்து உற்பத்தி செய்யக் கூடிய பொருட்களைத் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிந்து எழுதுக.**

**அலங்காரக்கும்பல்,அகப்பை, கயிறு, எண்ணெய், வினாகரி, பாய்**

9. தேங்காய்த் தண்ணீர் ......................................
10. தேங்காய்ப் பால் ......................................
11. சிரட்டை ......................................
12. தென்னந்தும்பு ......................................
13. தென்னம் பூ ......................................
14. எரிபொருட்களாக பயன்படக்கூடிய தென்னையின் பாகங்கள் இரண்டு எழுதுக?
......................................

***கீழே தரப்படும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களைத் தருக.**

15. தென்னைமரம் ......................................
16. தேங்காய் ......................................
17. எண்ணெய் ......................................
18. பாய் ......................................

***கீழ்வரும் அட்டவணையில் சில பொருட்களின் நிறைகள் தரப்பட்டுள்ளன.**

| | |
|---|---|
| பிஸ்கட் பை 2 | 160 g |
| டொபி ஒன்றும் பிஸ்கட் பைக்கற் ஒன்றும் | 90 g |
| டொபி ஒன்றும் கோப்பிப் பைக்கற் ஒன்றும் | 120 g |
| கோப்பிப்பைக்கற் ஒன்றும் தேயிலைப் பைக்கற் ஒன்றும் | 360 g |
| பால்மா பைக்கற் ஒன்றும் தேயிலைப் பைக்கற் ஒன்றும் | 650 g |


***இதன் படி ஒவ்வொரு பொருளினதும் தனித்தனியான நிறைகளைக் காண்க.**

19. 1 பிஸ்கட் பைக்கற் ..........................g
20. 1 டொபி ..........................g
21. 1 கோப்பி பைக்கற் ..........................g
22. 1 தேயிலைப் பைக்கற் ..........................g
23. 1 பால்மா பைக்கற் ..........................g

***நான் கடைக்குச் சென்று பின்வரும் பொருட்களை வாங்கி வந்தேன். அப்பொருட்களின் மொத்த நிறையைக் காண்க.**

24. 5 பிஸ்கட் பைக்கற்றுக்கள் ..........................g
25. 2பால்மாப் பைக்கற்றுக்கள் ..........................g
26. 2கோப்பிப் பைக்கற்றுக்கள் ..........................g
27. 3தேயிலைப் பைக்கற்றுக்கள் ..........................g
28. மொத்த நிறை ..........................kg......g

***பொருட்கள் நீரை உறிஞ்சும் விதத்தை அவதானிப்பதற்காக ரகு பின வரும் பொருட்களை ஒரு நீர்த் தொட்டியில் வைத்தான்.**




A செங்கல்
B துணித்துண்டு
C மரக்குற்றி
D விளக்குத் திரி
E காட்போட்
F பொலித்தீன்

29. நீரில் போடப்படும் எல்லாப் பொருட்களும் நீரை உறிஞ்சுமா?..........................
30. நீரை உறிஞ்சும் பொருட்கள் யாவும் ஒரே வேகத்தில் நீரை உறிஞ்சுமா?..........................
31. மிக விரைவாக நீரை உறிஞ்சும் பொருள் எது?..........................
32. மிகக் குறைவாக நீரை உறிஞ்சும் பொருள் எது?..........................

33. நீரில் மிதக்கக்கூடிய பொருட்கள் இரண்டும் எவை?..........................

***பாதார்த்தங்கள் நீரில் கரையும் இயல்பைக் கொண்டு தரப்பட்டுள்ள தகவல்களுக்கு ஏற்றவாறு பின்வரும் அட்டவணையை நிரப்புக.(✓அடையாளமிடுக)**


| | பதார்த்தம் | முற்றாகக் கரையும் | ஓரளவு கரையும் | கரையாது |
|---|---|---|---|---|
| 34 | சீனி | | | |
| 35 | மை (இந்தியன்) | | | |
| 36 | சுண்ணாம்பு | | | |
| 37 | மணல் | | | |
| 38 | களிமண் | | | |
| 39 | தேங்காய்எண்ணெய் | | | |
| 40 | வினாகிரி | | | |
| 41 | மஞ்சள்தூள் | | | |

***பின்வரும் கருவிகள் எத்தகையோரால் பயன்படுத்தப்படுவன என எழுதுக.**

42. வெண்கட்டி ......................................
43. அளவுநாடா ......................................
44. அரம் ......................................
45. தூண்டில் ......................................
46. உடல் வெப்பமானி ......................................
47. தூக்குக்குண்டு ......................................
48. கலப்பை ......................................

***கீழே ஒரு பாடலின் வரிகள் ஒழுங்கின்றித் தரப்பட்டுளு;ளன. அவற்றைச் சரியான முறையில் ஒழுங்குபடுத்தும்போது வரும் இலக்கங்களை நேரேயுள்ள கூட்டினுள் எழுதுக.**

49. ஆவல்கொண்டே ஓடினர் [ ]
50. தேய்த்துப் பல்துலக்கினர் [ ]
51. சேவல் கூவ எழுந்தனர் [ ]
52. அள்ளீ அள்ளிக் குளித்தனர் [ ]




ஒரு பலகைத்துண்டில் ஒரு பக்கத்தில் 5வரைதல் ஊசிகள் வீதம் A,B,C,D,E எனவும் P,Q,R,S,T எனவும் 10 ஊசிகள் குற்றப்பட்டுள்ளன. படத்தில் காட்டியபடி மின் கம்பிகளால் அவ்வூசிகள் இணைக் கப்பட்டுள்ளன.

மின்குமிழுடன் X,Y ஆகிய கம்பிகளின் முனைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

***பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

53. Xமுனையை A யுடனும் Y முனையை Q உடனும் தொடுக்கும் போது மின்குமிழ் (ஒளிரும்/ஒளிராது)
54. Xமுனை Aயுடனும் Yமுனை S உடனும் தொடுக்கும்போது மின்குமிழ் (ஒளிரும்/ஒளிராது)
55. Yமுனை Dயுடனும்X முனைT யுடனும் தொடுக்கும் போது மின்குமிழ் (ஒளிரும்/ஒளிராது)
56. Yமுனை Cயுடனும் Xமுனை Pயுடனும் தொடுக்கும்போது மின்குமிழ் (ஒளிரும்/ஒளிராது)
57. Xமுனையும் D முனையும் ஏதேனும் ஒரு புள்ளியில் தொடும்போது மின்குழிழ் (ஒளிரும்/ஒளிராது)

***கீழே சில விளையாட்டுக் கருவிகள் தரப்பட்டுள்ளன. அவ் விளையாட்டுக் கருவிகள் செய்வதற்குத் தேவையான பொருட்களைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.**

| | விளையாட்டுக் கருவி | | தேவையான பொருட்கள் |
|---|---|---|---|
| 58. | பம்பரம் | ( ) | 1. தடி ஒன்று, ஒரு கம்பித்துண்டு, ஒரு தகரமூடி, வெற்றுப்பேணி ஒன்று, ஆணி ஒன்று, |
| 59. | அசையும் குழந்தை | ( ) | 2. பழையநூற்கட்டை ஒன்று, மெழுகுவர்த்தித்துண்டு ஒன்று, இறப்பர்ப்பட்டி, ஈர்க்கு |
| 60. | உருளும் வண்டி | ( ) | 3. 60 cmநீளமான கம்பி, போத்தல் ஒன்று, பொம்மை ஒன்று கனக்குற்றிகள் இரண்டு |

***பின்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

61. உடுக்கு, மேளம் ஆகிய இசைக் கருவிகளில் ஒலி ஏற்பட வாயினால் ஊதவேண்டும். ( )
62. தேசிய கீதம் பாடப்படும் போது இலகுவாய் நிற்க வேண்டும். ( )
63. வளையத்தால் புகுந்து செல்வதால் தனது உடலின் பருமன் பற்றிய அனுபவம் கிடைக்கும். ( )
64. கிழிந்த ஆடைகளைத் தைப்பதற்கு அலங்காரத் தையல் முறைகளைப் பயன்படுத்தலாம். ( )
65. மென்மரத்துண்டுகள் போன்றன அச்சுப் பதித்தலிற்காக பயன்படுத்தமுடியும். ( )
66. 'குழாய் ஊதி 'கம்பி அதிர்வினால் ஒலி உண்டாகும் இசைக் கருவியாகும். ( )
67. பப்பாசிக்குழாயினால் நாம் வீட்டிலிருந்து புல்லாங்குழல் செய்யலாம். ( )
68. 'ஜலதரங்கம்' புத்தளிப்பு இசைக் கருவியாகும் ( )

***"நடுக்கடலின் மீது படகில் பிரயாணம் செய்யும் நான்" எனும் தலைப்பில் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக.**

69. ..........................................................................
70. ..........................................................................
71. ..........................................................................
72. ..........................................................................
73. ..........................................................................
74. ..........................................................................

நாவில் எலும்புகள் கிடையாது – ஆனால் அது எலும்புகளை நொறுக்கவல்லது.

–அல்பேனியா

வலம்புரி

## சிதைந்துபோகும் கலாசார கட்டுமானத்தை கட்டியெழுப்ப முன்வாரீர்

கலாசார சீரழிவை நோக்கிய வேதனையை நேற்றைய தினம் இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

இறுக்கமான பண்பாட்டுக் கோலங்களைக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தின் கட்டுக்கோப்பு அறுந்துபோவதை எவராலும் அனுமதிக்க முடியாது.

இந்தத் தகவலை வெளிப்படுத்தி இருந்த வேளை, பிறழ்வு நிலையில் பிறந்த குழந்தைகள் தொடர்பில் ஏழு பெண்கள், யாழ்ப்பாணம் மற்றும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இவர்களில் பதின்மூன்று வயது சிறுமி ஒருவரும் அடங்குவர் என்ற செய்தி தலையில் சம்மட்டியால் அடிப்பதற்கு ஒப்பானது.

தாம் பெற்ற குழந்தைகளுக்கு யார் தந்தையென்ற இவ்வழக்குகளில் மரபணு பரிசோதனைக்குச் செல்லவேண்டிய நிலைக்கு நீதிமன்றம் ஆளாகியுள்ளது.

இந்தப் பரிதாபம் கந்தபுராண கலாசார எனப் போற்றப்படும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவது வேதனைக்குரியதாகும்.

அதேவேளை தகாத உறவுகள் மூலம் பிறந்த குழந்தைகளின் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது? பாதிப்புற்ற பெண்களின் நிலை யாது? என்ற கேள்விகள் நெஞ்சைத் துளைக்கும் அதேவேளை இத்தகைய சம்பவங்கள் தொடர்வதை தடுப்பதற்கான சமுதாயத்தின் நடவடிக்கை என்ன? என்பது ஆராயப்படவேண்டிய அம்சமாகும்.

யாழ்ப்பாணத்தில் நிலவிய கூட்டுக்குடும்பத்தின் கீழ் கட்டியெழுப்பப்பட்ட எமது கலாசாரம் இன்று அடியோடு பிறழ்வு கண்டுள்ளது.

அறிவியலின், நகரவாக்கத்தின், யுத்த அனர்த்தத்தின் பின்னணியில் எமது கூட்டுக்குடும்ப உறவு கலைந்து, தேசம் என்ற எல்லைக்கப்பால் சர்வதேசங்களில் நிலைகொண்டுள்ள தமிழ் உறவுகளிடையே மீண்டும் கூட்டுக்குடும்ப முறைமையை அறிமுகப்படுத்துவதும், அதனை கடைப்பிடிக்கத் தூண்டுவதும் சாத்தியமற்ற விடயங்கள்.

ஆனால் அதற்காக கலாசாரப் பிறழ்வுகளுக்கு அனுமதிப்பதென்பது ஒருபோதும் ஏற்புடையதல்ல.

எனவே இது விடயத்தில் ஓர் இறுக்கமான கட்டுக்கோப்பைக் கட்டியெழுப்பத் தமிழ்ச் சமூகம் முன்வரவேண்டும்.

# 'சார்க்' மாநாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 75 வீதமானவை பாதுகாப்புச் செலவு

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

'சார்க்' மாநாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 75 வீதமானவை பாதுகாப்புக்காக செலவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் 'சார்க்' மாநாட்டுக்காக 2.8 பில்லியன்ரூபா செலவு ஏற்படுவதாகக் குறிப்பிட்டார்.

இதில் 75 வீதமானவை மாநாட்டிற்காக வருகை தரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக ஒதுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் பாகிஸ்தானிய ஜனாதிபதி பர்வேஸ்முஷாரப் ஆகியோரும் பங்கேற்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் வடபகுதியில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையின் காரணமாகவே இந்தியாவும் பாகிஸ்தானும் தமது படைகளைக்கொண்டு தமது தலைவர்களுக்குப் பாதுகாப் பளிப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

அமெரிக்க , ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சீனா, கொரியா ஆகியநாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டின் போது பார்வையாளர்களாக பங்கேற்றவுள்ளமையால் அவர்களுக்கும் பாதுகாப்பளிப்பது இலங்கை அரசாங்கத்தின் கடமை என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, 1976ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற அணி சேரா நாடுகளின் மாநாடு தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தது.

எனினும் அந் மாநாட்டின் காரணமாகவே 1.5 மில்லியன் இலங்கையர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடிந்தது என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

(அ-6)

# 40 வருடங்களுக்கு மேல் வாழ்க்கை நடத்திய 48 கடைகள் இராஜகிரியாவில் தரைமட்டம்

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெறவுள்ள சார்க் மாநாட்டை முன்னிட்டு கொழும்பிலும் அதனையண்டிய பகுதிகளிலும் வீதியோரங்களில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

பாதுகாப்பு உயரதிகாரிகளின் உத்தரவின் பேரில் பொலிஸாரின் உதவியுடன் வீதியோர்ரங்களில் அமைக்கப்பட்டிருந்த கடைகள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக கொழும்பு ஆமர் வீதி , புறக்கோட்டை, கோட்டை, கொம்பனி வீதி ஆகிய பகுதிகளில் வீதியோரம் அமைக்கப்பட்டிருந்த கடைகள்முற்றாக அகற்றப்பட்டுள்ளன. அத்தோடு கொழும்பு, நீர்கொழும்பு வீதியில் வீதியோரங்களில் அமைக்கப்பட்டிருந்த சிறு சிறு வர்த்தக நிலையங்களும் அகற்றப்பட்டுவருகின்றன.

இது தவிர இராஜகிரிய கோட்டே வீதியில் பாதை இரு மருங்கிலும் அமைக்கப்பட்டிருந்த கடைகள் பல பக்கோ இயந்திரங்கள் மூலம் உடைத்து அகற்றப்பட்டது. கல்லால் கட்டப்பட்டிருந்த பாரிய கட்டடங்கள் இவ்வாறு அகற்றப்பட்டமையினால் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. முறையாக மாதாந்தம் வரிசெலுத்தி தாம் கடை நடத்திவருகின்ற நிலையில் மனிதாபிமானமற்ற முறையில் கடைகள் உடைத்து அகற்றப்பட்டதாக கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர். இதற்கான காரணத்தை கோரிய போது சார்க் மாநாட்டை முன்னிட்டு பாதுகாப்பு காரணங்களுக்காக கடைகள் அகற்றப்படுவதாக தெரிவிக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நாற்பது வருடங்களுக்கு மேலாக இப்பகுதியில் கடை நடத்திவரும் மெனிக்கே என்ற பெண் தனது கடை திடீரென சுக்கு நூறாக்கப்பட்டது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது,

இந்தஇடத்தில் 42 கடைகள் இருந்தன நாம் கோட்டே மாநகர சபைக்கு வரி செலுத்தியும் வருகிறோம். மின்சார கட்டணம் செலுத்தியும் வருகிறோம். கடந்த 40வருடங்குளுக்கு மேலாக இங்கு வியாபாரம் நடத்தி வாழ்க் கையை ஓட்டினோம்.

ராஜகிரிய பகுதி மக்கள் மரக்கறி, மீன் போன்றவை வாங்கிச் செல்கின்றனர். கடைகள் உடைத்ததற்குவேறு இடங்களில் கடைகள்வழங்கப்படவில்லை. அதற் கான நட்டஈடும் வழங்கப்பட வில்லை இந்த அரசாங்கம் தொடர்ந்தும் ஏழைகளின் வயிற்றில் அடித்து வருகிறது என்றார்.(அ)

# வடக்கு கிழக்கு பகுதிகளில் கைது செய்யப்பட்டவர்கள் சீர் திருத்தப்படுவார்கள் – சரத் என் சில்வா

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் வைக்கப்படவுள்ள வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தாம் பயங்கரவாத செயல்களில் ஈடுபடமாட்டோம் என உறுதியளிக்கும் சந்தர்ப்பங்களில் அவர்கள் சீர் திருத்தப்பட்டு மீண்டும் சமூகத்தில் இணைக்கப்படுவார்கள் என பிரதம நீதியரசர் சரத் என்சில்வா தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச்சிறைச்சாலை வளாகத்தில் நீதிவான் நீதிமன்றக்கட்டிடத்தை திறந்து வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்ட போதே பிரதம நீதியரசர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தாம் மக்களைச் சிறையில் வைப்பதற்கு கவனம் செலுத்துபவர்கள் அல்ல மாறாக அவர்களை காப்பதற்காக கவனம் செலுத்துபவர்கள் என இதன் போது பிரதம நீதியரசர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் பங்கேற்ற பிரதி நீதி மறுசீரமைப்பு அமைச்சர் வீ.புத்திரசிகாமணி வடக்கு கிழக்குப் பகுதிகளில் இருந்து கைது செய்யப் பட்டுள்ளவர்கள் தொடர்பாக பிரதம நீதியரசர் தெரிவித்த கருத்துக்களைச் சுட்டிக்காட்டி இது தொடர்பாக தற் போது முனைப்புகள் மேற்கொள்ளப் படுவதாகத் தெரிவித்தார்.

(அ)

# வெள்ளி நற்சிந்தனை 29

## பக்தியின் மொழி தமிழ்

### கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்.

இறைவன் எங்கும் நிறைந்திருப்பவன் என்ற கோட்பாடு எம்முடைய வழிபாட்டு மரபின் அடிநாதமாக உள்ளது. இக் கருத்தை மெய்யடியார்கள் தமது பாடல்களிலே குறிப்பிட்டுள்ளனர். இயற்கையிலே இறை ஆற்றலைக் கண்ட அவர்கள் அதனைப் பாடல்களிலே பதிவு செய்துள்ளனர். ஐம்பூதங்களான மண், நீர், அனல், காற்று, விண் என்பவற்றோடு சூரியன், சந்திரன் என்பவற்றையும் வழிபடும் மரபு எமது முதாதையிடையே இருந்துள்ளது.

இவற்றோடு இகம், பரம், எந்திசை, பெண்ணோடு ஆண்; பெருமை, சிறுமை என எல்லாவற்றோடும் இறைவனைத் தொடர்புறுத்திப் பல வழிபாட்டு நடைமுறைகளும் உள்ளன. பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் ஓர் உருவிலே கண்டு வழிபடக் கோவில்கள் அமைக்கப்பட்டன. இயற்கையின் பேராற்றல் களையெல்லாம் நெறிப்படுத்தி ஆளும் இறைவனுக்கு உருவம் தந்த போது ஐம்பொறிகளும் ஐம்புலன்களும் வழிபாட்டில் இணைந்து கொண்டன. இறைவனைக் கண்ணாரக் கண்டு களிக்கக் கண்களும், வாயார வாழ்த்த வாயும், தாழ்ந்து வணங்கத்தலையும் பணிசெய்ய உடலும் முரல்வதற்கு மூக்கும், நினைப்பதற்கு நெஞ்சும், கேட்பதற்குச் செவிகளும் இருப்பதாக நாவுக்கரசர் தனது பாடல்களில் விளக்கிக் கூறியுள்ளார்.

இறைவன் இருப்பிடமான கோயிலில் ஐம்பொறிகளாலும் ஐம்புலன் களாலும் வழிபாடு செய்யலாம். விண்ணிலே இருக்கும் இறைவன் அடியார்க்கு அருள் செய்யவென மண்ணுக்கு வந்து விரும்பி உறையும் கோயில்கள் பல உள, அவற்றுள் ஒன்றான திருவெண்காடு பிள்ளைப் பேறு வேண்டி வழிபடுதற்கு உகந்த தலம் எனப்படுகிறது. இத்தலத்தின் சிறப்பை ஞான சம்பந்தர் பத்துப் பாடல்களிலே பாடியுள்ளார். கோவில் வழிபாட்டு நடைமுறையில் ஒரு முக்கியமான செயற்பாட்டினை அப்பதிகத்திலே குறிப்பிட்டுள்ளார்.

திரு வெண்காட்டிலே அமைந்துள்ள முக்குளத்திலே மூழ்கிநீராடுபவர் பிள்ளைப் பேற்றைப் பெறுவார் என்ற செய்தியையும் கூறியுள்ளார். கோவில் வழிபாட்டிற்குச் செல்வோர் அகமும் புறமும் தூய்மையாகச் செல்லவேண்டும். புறத்தூய்மை நீராடலால் நிறைவாகும். அகத்தூய்மை இறைவன் பற்றிய நினைப்பால் நிறைவேறும். ஆனால் இத் தலத்திலே முக்குள நீரில் நீராடுபவர்க்கு இன்னொரு பயனும் உண்டு. ஒரு விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் தொடர்ந்த முயற்சி தேவை. இறை வழிபாட்டின் பண்பும் பயனும் இத்தகையதே, திருஞானசம்பந்தர் இளவயதிலே இறைசிந்தையால் பல அற்புதங்களை நிகழ்த்தியவர் அவரது பாடல் உலகவாழ்க்கையில் வழிபாட்டின் பயனை விளக்கி நிற்கிறது.

'மண்ணோடு நீர் அனல் காலோடு
ஆகாயம் மதிஇரவி
எண்ணில் வருமியமான இக பரமும்
எண்திசையும்
பெண்ணிணொடு ஆண் பெருமை
யொடுசிறு பாண்மையுமாம் பேராளன்
விண்ணவர் கோன் வழிபட வெண்
பாடு இடமா விரும்பினனே'

## அரசாங்கம், பொருளாதார பின்னடைவை சமாளிப்பதற்காக இலங்கை வங்கியிடமிருந்து 54 பில்லியன் மேலதிக பற்று

### ஐ.தே.க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்தராஜ பக்ஷவின் அரசாங்கம் நாட்டில் ஏற்பட்டுள்ளபொருளாதார தளம்பலை சமாளிக்கும் முகமாக இலங்கை வங்கியிடம்இருந்து54பில்லியன் ரூபாய்களை மேலதிக பற்றாகபெற்றுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.நாட்டின் பணவீக்கம் 28 வீதமாகஅதிகரித்துள்ள நிலையிலேயே இந்தப்பணம் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார் .அரசாங்கம், அரசாங்கப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வை வழங்க பின்னடிக்கின்றபோதும் 2.8 பில்லி யன்கள் செலவில் சார்க் மாநாட்டை நடத்துவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார் வெளிநாட்டவர்களின் இரண்டு நாள் கூத்துக்காக 60வருடங்களாக கொழும்பு கம்பனித் தெருவில் வசித்து வந்த பல குடும்பங்கள் ஏழு நாட்களுக்குள் அவர்களின் இடங்களில் இருந்து வெளியேறவேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன்ராஜகிரிய பகுதியில் வியாபாரத் தளங்கள் உடைக்கப்பட்டதும் மனிதாபிமான மற்றசெயல் என ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (அ-6)

## சுட்டுக்கொல்லப்பட்ட தமிழக மீனவர்கள் தொடர்பில் விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு

தமிழக வேதராணியமீனவர்கள்இருவர் கடந்த ஐந்து நாட்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம்தொடர்பாக இந்திய காவல் துறையினர்விசாரணை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

இதன்படிகுறித்தஇரண்டு மீனவர்களும் மிகக்குறுகிய தூரத்தில் இருந்தே துப்பாக்கி சூட்டுக்கு உள்ளாகியுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சுமார் 19முதல் 20வரை யிலான துப்பாக்கி சன்னங்களின் அடையாளங்களை மீனவர்களின் கண்ணாடி இழைப் படகுகளில் காணக்கூடியதாக உள்ளதாக அந்த அறிக்கையில்குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சம்பவத்தில்காயமடைந்தமீனவர் ஒருவர் இந்தியாவின் 302மற்றும் 307 ஆவது குற்றவியல் சட்டத்தின்கீழ் வரும் 25 ஆவது ஆயுத சட்டத்தின்படிபெயர் குறிப்பிட முடியாதஇலங்கையின் கடற்படையினரேதம்மீது துப்பாக்கிப்பிரயோகம்மேற்கொண்டதாகமுறைப்பாடு செய்துள்ளார். (அ-6)

## இலங்கையில் இருந்து 29 தமிழர்கள் தமிழகத்தில் அடைக்கலம்

(கொழும்பு)

தமிழகம் இராமேஸ்வரம் தனுஷ்கோடியில் மணல் திட்டில் இறக்கிவிடப்பட்ட 11 இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது. மன்னார் பேசாலையில் கரையில் இருந்து புறப்பட்ட வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் வசிக்கும் 7 பெண்கள் உட்பட்டவர்கள் தனுஷ்கோடி இரண்டாம் மணல் திட்டில் இறக்கி விடப்பட்டனர். இதன் பின்னர் இவர்கள் பல மணித்தியாலங்கள் நீராகாரம் இன்றி நிர்க்கதியாக இருந்து குறித்த 11 இலங்கை தமிழர்களும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த இந்திய கடற்படையினரால் காப்பாற்றப்பட்டனர்.

இதேவேளை, முல்லைத் தீவில் இருந்து சென்ற 7 பெண்கள், 6 குழந்தைகள் உட்பட்ட 18 பேரும் நேற்று முன்தினம் இராமேஸ்வரத்தைச் சென்றடைந்தனர். இவர்களும் பாரிய அசௌகரியங்களுக்கு மத்தியிலேயே அரிச்சல் முனைக் கடற்கரையைச் சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்படுள்ளது.

இலங்கையின் வடபகுதியில் இடம் பெறும் தாக்குதல்களை அடுத்து, தினந்தோறும் தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு அகதிகளாகச் செல்கின்றனர். (அ-6)

## இந்தியப் பிரதமரின் பாதுகாப்பிற்காக 3 போர்க் கப்பல்கள் இலங்கை செல்லும்

### த டைம்ஸ் ஒவ் இந்தியா தகவல்

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவிருக்கும் 15ஆவது சார்க் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளும் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கின் பாதுகாப்புக்கு எந்த விதமான குந்தகமும் ஏற்படுவதற் கான சந்தர்ப்பத்தை வழங்க இந்தியா விரும்பவில்லையெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டு இந்திய அரசாங்கம் மூன்று போர்க் கப்பல்களையும் இரண்டு முன்னணி ஏவுகணைஎதிர்ப்புக் கலங்களையும்இலங்கைக்கு அனுப்பத் தீர்மானித்திருப்பதாக 'தடைம்ஸ்ஒவ் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பிடமிருந்து அச்சுறுத்தல்இருப்பதால் மன்மோகன் சிங்கின் பாதுகாப்புத் தொடர்பான விடையங்களை இந்திய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராணயன் நேரடியாகக் கையாண்டுவருவதாகவும் கொழும்பு செல்லும் இந்தியப்பிரதமரின் பாதுகாப்புக்குறித்து இரு நாடுகளுக்கும் இடையில் கடுமையான கருத்துப்பரி மாற்றங்கள் இடம் பெற்று வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் கடல் மார்க்கமாகவும் ஆகாயமார்க்கமாகவும் தாக்கக்கூடிய வல்லமையைக் கொண்டிருப்பதால் இந்தியப்பிரதமரின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படுவதற்கு எந்த விதமான சந்தர்ப்பத்தையும் வழங்க இந்திய அதிகாரிகள் விரும்பவில்லையென அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமரின் பாதுகாப்புக்கு விசேட பாதுகாப்புக்குழு அனுப்பப்படும் என உயர் வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'தடைம்ஸ் ஒவ் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைப் பாதுகாப்புப் பிரிவினருக்கும் மேலதிகமாக இந்தியப்பாதுகாப்புப் படையினர் மன்மோகன் சிங்கிற்குப் பாதுகாப்பு வழங்கவிருப்பதுடன் போர்க்கப்பல்களும் உலங்கு வானூர்திகளும் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய வி மானப்படையினரின் உலங்கு வானூர்திகள் கொழும்பு கோட்டை கொள்ளுப்பிட்டி உள்ளிட்ட அதியுயர் பாதுகாப்பு வலயங்களின் வான்பரப்பில் பறப்பில் ஈடுபட்டு பாதுகாப்பு வழங்கும் என அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## சகல பொலிஸ் பதிவுகளுடனும் இருந்த இளைஞர் துப்பாக்கி முனையில் வெள்ளைவானில் கடத்தல்

### தெஹிவளையில் சம்பவம்

(கொழும்பு)

சகல பொலிஸ் பதிவுகளுடனும் தெகிவளையில் தங்கியிருந்த இளைஞர் ஒருவரைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் வெள்ளைவானில் இராணுவச் சீருடையணிந்த மூவரும் ஒரு ஊர்காவற்படை வீரரும் சிவில் உடையில் வந்த நால்வரும் துப்பாக்கி முனையில் அச்சுறுத்திக் கடத்திச் சென்றதாக அவரது உறவினர்கள் தெகிவளைப் பொலிஸ் நிலையத்திலும் பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணனிடமும் புகார் செய்துள்ளார்.

2ஆம் வட்டாரம் அனலைதீவைச் சேர்ந்த குமாரசாமி கிருபாகரன் (வயது31) என்பவரே இவ்வாறு கடத்தப்பட்டதாக அவரது உறவினரும் தெகிவளையில் வியாபாரம் செய்பவருமான திருநாவுக்கரசு சசிதரன் புகார் செய்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தனது வர்த்தக நிலையத்திற்கு 562076 என்ற இலக்கமுடைய வெள்ளை வானில் வந்த இராணுவச் சீருடை ஆயுததாரிகளே இக் கடத்தலை மேற்கொண்டதாகவும் ஸ்தாபனத்திற்குள் நுழைந்து அங்கிருந்த சுமார் ஏழு பேரை முழங்காலில் இருத்தி விட்டுக் கிருபாகரனை இழுத்துச் சென்று வானில் ஏற்றியதாகவும் சசிதரன் தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

கிருபாகரனின் பெற்றோரும் சகோதரரும் 1999ஆம் ஆண்டு மன்னாரில் இடம் பெற்ற விமானத் தாக்குதலில் இறந்து போனதாகவும் முள்பட்டதால் ஒரு கண்ணை இழந்த இவர் வடக்கில் வாழமுடியாத சூழலினாலேயே தெகிவளையில் வசிக்கும் ஒன்றுவிட்ட சகோதரனாகிய தன்னிடம் வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கிருபாகரனின் பதிவு உட்பட அனைத்து ஆவணங்களையும் கடத்தல்காரர்கள் எடுத்துச் சென்றுள்ளதாகவும் அவர் எங்கு கடத்திச் செல்லப்பட்டாரென்று அறிய முடியவில்லையென்று சசிதரன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாகப் பிரதியமைச்சர், உயர்மட்டப் பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார். (அ)

## வேலைவாய்ப்பற்றோரின் எண்ணிக்கை பிரித்தானியாவில் அதிகரிப்பு

(கொழும்பு)

பிரித்தானியாவில் வேலைவாய்ப் பற்றோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2008மே மாதம் வரையான 3மாத காலப் பகுதியில் பிரித்தானியாவில் வேலைவாய்பற்றோரின் எண்ணிக்கை 12,000தினால் அதிகரித்து 1.62 மில்லியனை எட்டியுள்ளதாக தேசிய புள்ளிவிபர நிலையம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 840,100பேர் முழுமையாக வேலையற்றிருப்பதுடன் , ஜூன் மாதத்தில் மாத்திரம் இத்தொகை 15,500இனால் அதிகரித்துள்ளதாகவும் தேசிய புள்ளிவிபர நிலையம் தெரிவித்துள்ளது.

1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 71,000 ஆகவிருந்த வேலைவாய்ப் பற்றோரின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இது பாரிய பாய்ச்சலாகும் என்றும் இந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

பொருளாதார வீழ்ச்சி, எரிபொருட்களின் விலையதிகரிப்பால் தொழிலாளர்கள் பலர் வேலையில்லாப் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருவது, சொத்துக்களின் வீழ்ச்சி மற்றும் வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக் குறைவு ஆகியன வேலையில்லாப் பிரச்சினைக்குரிய காரணங்களாக குறிப்பிடப்படுகின்றன.

15 வருடங்களுக்கும் மேலாக வேலைக்காக விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அடுத்த ஆண்டில் பிரித்தானிய பொருளாதாரத்தில் வீழ்ச்சியேற்படும் அறிகுறி காணப்படுவதாகவும் ஆய்வாளர் பிலிப் ஷோ தெரிவித்துள்ளார். (அ)


மக்கள் வங்கி

47வது ஆண்டு கொண்டாட்டங்கள்

வரிசையில்

பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளை

குளிரூட்டப்பட்ட மண்டபத்தில்

20.07.2008

ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணிக்கு

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம அனுசரணையில்

சுவாமி விவேகானந்தர்



வாழ்வினைச் சித்தரிக்கும் அற்புதமான ஓவியக் கண்காட்சி!

ஓவியங்கள் படங்கள்தத்துவ முத்துக்கள் என அரிய பொக்கிஷங்கள் கொண்ட ஆன்மீக மழையில் நனைந்திட அனைவரும் மலர் கொண்டு திரண்டு வாருங்கள்!

உங்கள் ஆன்மாவை பக்குவப்படுத்தும் பரவசத்தில் திளையுங்கள்!

(கண்காட்சி மாலை. 4.00 மணிவரை)

தங்கள் சேவையிலுள்ள முகாமையாளரும், பணியாளர்களும்

(சி/1336)

நன்றி –சு வாமி சித்ரூபாநந்தா

# ஐரோப்பிய ஆடை ஏற்றுமதி கோட்டா நீடிப்பு உறுதிமொழியை வழங்கமுடியாது-பிரித்தானியா

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு மத்தியில் ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதி கோட்ட முறையை நீடிப்பதற்கான எவ்வித உறுதி மொழியையும் வழங்கமுடியாது என பிரித்தானியாவின் ஆபிரிக்க, ஆசிய பிராந்தியத்திற்கான பிரதி வெளியுறவு அமைச்சர் மலொக் பிறவுண் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களைச் சந்தித்தபோதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். இலங்கைக்கான ஐரோப்பிய நாடுகளின் ஆடை ஏற்றுமதி கோட்டா முடிவடையும் நிலையில் அது இடைநிறுத்தப்படும் அச்சம் ஏற்பட்டுள்ளது [illegible] காரணமாக சுமார் ஒரு லட்சம் இளைஞாகள தமது [illegible]களை இழப்பர் என்ற அச்சம் மேலிட்டுளளது.

இந்த நிலையிலேயே பிரித்தானிய அமைச்சரின் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. இதே வேளை இந்தச் சந்திப்பின் போது கருத்துரைத்த கிழக்கு மாகாண சுகாதாரத்துறை அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தமது மாகாணசபைக்கு 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்த போதும் காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் இன்னும் வழங்கப்படவில்லை என்பதைப் பிரித்தானிய அமைச்சரிடம் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் கிழக்கு மாகாணசபைக்கு உரிய நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற் கிடையே கிழக்கில் ஒரு சிங்கள மொழிப் பல்கலைக்கழகம் அமைக்கப்படவில்லை என்ற குறைபாடு நிலவுவதாக மாகாணசபையின் தலைவர் எம்.கே.டி.எஸ் குணவர்த்தன. பிரித்தானிய அமைச்சரிடம் சுட்டிக்காட்டினார். (அ)




பொ.சண்முகநாதனின் "நகைச்சுவை இலக்கிய முன்னோடிகள்" நூல் வெளியீட்டு விழாவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் சு.சிவநேஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சிவாஜி, நூலாசிரியர் பொ.சண்முகநாதன் சி.சிவசரவணபவன் (சிற்பி) ஆகியோர் நிற்பதையும் காணலாம்.

# பிரித்தானிய அமைச்சர் கிழக்குக்கு விஜயம் முதலமைச்சர் பிள்ளையானுடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கான ராஜாங்க அமைச்சர் மலோக் பிறவுண் திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் உட்பட மாகாண சபை உறுப்பினர்களை சந்தித்து பேசினார் இச்சந்திப்பில் மாகாண அமைச்சர் எம். எல்.ஏ. எம். ஹிஸ்புல்லாவும் கலந்து கொண்டார். திருமலை உட்துறை முக வீதியில் உள்ள கிழக்கு மாகாண சபைக்கு விஜயம் செய்த பிரித் தானிய ராஜாங்க அமைச்சரை முதலமைச்சர் சந்திரகாந்தன் மலர்மாலை அணிவித்து வரவேற்றார்.

பிரித்தானிய அமைச்சருடன் முதலமைச்சர் தலைமையிலான உறுப்பினர்கள் சுமார் ஒரு மணி நேரம் வரை பேச்சு வார்த்தை நடத்தினார் இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பாக அமைச்சரவைப் பேச்சாளர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா செய்தியாளர்களுக்குத் தெரிவிக்கையில் கிழக்கு மாகாண சபைஉருவான பின்னர் உருவான அரசியல் நிலை இடம் பெயர்ந்த மக்களுக்கான மீள்குடியேற்ற நடவடிக்கைகள் கிழக்கின் அபிவிருத்தி 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான விடையங்கள் மற்றும் கிழக்கிற்கான பொலிஸ் அதிகாரம் தொடர்பான விடை யங்கள் பற்றி இங்கு பேசப்பட்டதாக



கூறினார்.

இதேவேளை, கிழக்கின் பொருளாதாரம், விவசாயம் , கல்வி, வீதி அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகள் தொடர்பாக பிரித்தானியா போதிய ஒத்துழைப்பினை வழங்கும் என ராஜாங்க அமைச்சர் உறுதியளித்ததாகவும் அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்தார். (அ)

# கொசோவோ விடுதலை இராணுவம் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம்

## திவயின நாளேடு செய்தி

கொசோவோ விடுதலை இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை விநியோகித்துள்ளதாக திவயின நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை லண்டனில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் கொசோவோவின் நகரசபை மேயர் ஒருவர் கலந்து கொண்டுள்ளார்.

கொசோவோவின் நகரசபை மேயரான பஜ்ரேட் ரெக்செனாய் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை விநியோகித்ததாக ஒப்புக்கொண்டுள்ளார். இதனால் அமெரிக்க, ஜேர்மன், பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் இருந்து விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கிடைக்கப்பெற் றுள் ளதாக இராணு வப்புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டபல ஆயுதங்கள் மேற்குலக நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டதெனத் தெரிவிக்கப்படுகிறது. மேற்குலகத்தைச் சேர்ந்த பல நாடுகள் கொசோவோவிற்கு ஆயுதங் களை வழங்கியிருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது . (அ-5)

# நைஜீரியாவின் நகரொன்றில் ஆயுததாரிகளின் அச்சுறுத்தலால் ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்

நைஜீரியாவில் நைஜர் டெல்டா பகுதி நகரமான பொனியில் இருந்து ஆயுததாரிகளின் அச்சுறுத்தலால் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி வருகின்றனர்.

எண்ணெய் மற்றும் இயற்கை வாயு ஏற்றுமதி நகரமான பொனித்தீவுப் பகுதியில் பரம்பரையாக வசிப்பவர்கள் அல்லாதோர் தலை வெட்டப்படுவார்கள் என ஆயுதக்குழு ஒன்று அச்சுறுத்தி உள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இதனை அடுத்து அங்கிருந்து மக்கள் வெளியேறி வருவதாகக் கூறப்படுகின்றது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்தப் பகுதியில் இராணுவ வீரர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் இனந்தெரியாத குழு ஒன்று நடத்திய தாக்குதலில் கர்ப்பிணித்தாய் உட்பட 9பேர் உயிர்இழந்தனர். (அ)

# இறந்தவரின் சாம்பலிலிருந்து வைரம் சுவிஸ் நிறுவனம் தயாரிப்பு

இறந்தவர்களின் சாம்பலை வைரமாக மாற்றித் தருகிறது. சுவிட்சர்லாந்தை சேர்ந்த ஒரு நிறுவனம் ஜப்பானில் இருந்தும் கூட இதற்காக விண்ணப்பங்கள் கொடுக்கப்படுகின் றது.

பொதுவாக இறந்து போனவர்களை புதைப்பது அல்லது எரிப்பது தான் வழக்கம். இப்போது இறந்து போனவர்களை வைரமாக மாற்றி ஆபரணமாகவோ அல்லது விரலில் மோதிரமாகவோ அணிந்து கொள்ள முடியும். சுவிட்சர்லாந்தின் கிராவ்புடெண்டோ மாகாணத்தை சேர்ந்த அல்கோர்டான்சா என்ற நிறுவனம் இதை செய்து தருகிறது. இறந்து போனவர்களின் சாம்பலை. இந் நிறுவனம் வைரமாக விரும்பும் வடிவத்தில மாற்றி, தருகிறது. பெரும்பாலும் இதய வடிவில் தான் இறந்தவர்களின் சாம்பல் மாற்றப்படுகிறது சாம்பல் வைரமாகமாற்றபடுவதை கண்ணாடி சுவருக்கு வெளியில் இருந்து நேரில் பார்க்கலாம்.

இதற்கு கட்டணமாக எந்த வடிவம் எவ்வளவு பெரிய வைரம் என்ற அடிப்படையில் இரண்டு லட்சம் ரூபாயில் இருந்து 6.5 லட்சம் ரூபாய் வரை வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் 40 முதல் 50 விண்ணப்பங்கள் வரை வந்து சேர்கின்றன. (அ)

# பிராந்தியங்களுக்கு அதிகாரம் வழங்கத் தவறிய பெல்ஜிய பிரதமர் இராஜினாமா


(புறுஸெல்ஸ்)

பெல்ஜிய பிரதமர் யாவெஸ் லெதர்டி தனது இராஜினாமா கடிதத்தை இரண்டாம் அல்பேர்ட் மன்னரிடம் கையளித்துள்ளார். அரசியலமைப்பு சீர்திருத்தமொன்றை முன்னெடுக்க தவறியதையடுத்தே அவர் இராஜினாமா செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பிராந்தியங்களுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்க வழிவகுக்கும் மேற்படி அரசியலமைப்பு சீர்திருத்தத்தை முன்னெடுக்க கடந்த செவ்வாய்க்கிழமை வரை பிரதமர் யாவெஸ் லெதெர்மிக்கு காலக்கெடு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் அக்காலக் கெடுவுக்குள் அச்சீர்திருத்தத்தை நிறைவேற்று தவறியிருந்தார்.

பிரெஞ்சு மற்றும் டச் மொழி பேசும் கட்சிகளின் கூட்டமைப்பின் தலைவரான யாவெஸ் லெதெர்மி கடந்த மார்ச் மாதம் பிரதமர் பதவியை பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மன்னர் இரண் டாம் அல்பேட்,பிரதமரின் இராஜினா மாவை ஏற்பதா அன்றி இல்லையாஎன்பது குறித்து தீர் மானிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



பெல்ஜிய அரசாங்க கூட்டமைப்பு கட்சியானது , அந் நாட்டின் வடபகுதியைச் சேர்ந்த பிளேமிஷ் கிரிஸ்ரியன் ஜனநாயக கட்சி மற் றும் தென் பகுதியில் பிரெஞ்சு மொழி பேசு பவர்களின் பிராந்திய மான சமூகவுடைமை கட்சி என்பன வற்றை உள்ளடக்கியுள்ளது. (அ)

# லெபனானிய கைதிகள் ஐந்து பேரை இஸ்ரேல் விடுவித்தது

(லெபனான்)

லெபனானிய ஆயுதக்குழுவான ஹெஸ்பொல்லாவுடன் ஏற்பட்ட ஒரு பரிமாற்ற உடன்படிக்கையின் ஒரு பகுதியாக தற்போது இஸ்ரேல் ஐந்து கைதிகளை விடுவித்துள்ளது.

விடுவிக்கப்பட்டவர்களில் ஒரு பாலஸ்தீனக் குழுவைச் சேர்ந்த சமீர் காண்டர் என்பவரும் அடக்கம். ஒரு குழந்தை உட்பட மூன்று இஸ்ரேலிய பொதுமக்களை கொலை செய்ததற்காக அவருக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆயுட் தண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டு இஸ்ரேலிய இராணுவ வீரர்களின் உடல்பகுதிகளை ஹெஸ்பொல்லா ஒப்படைக்க சில மணி நேரத்தில் இஸ்ரேலின் இந்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. 2006ஆம் ஆண்டு எல்லை கடந்த ஒரு முற்றுகையின் போது இந்த இரண்டு இராணுவ வீரர்களும் பிடிக்கப்பட்ட சம்பவம்தான் லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதலை நடத்தத் தூண்டியது.

கைதிகள் பரிமாற்றம் காரண மாக லெபனானில் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. இஸ்ரேலைப் பொறுத்தவரையில் இது ஒரு கடு மையான உணர்வுபூர்வமான நாளே என்று இஸ்ரேலிய இராணுவத்தின் சார்பில் பேசவல்லவர் தெரிவித்துள்ளார். (அ)

# சரிசம வாய்ப்பு வழங்கப்படுமாயின் அமெரிக்காவுடன் பேசத் தயார்

## ஈரான் ஜனாதிபதி அறிவிப்பு

(ஈரான்)

அமெரிக்காவுடனான நேரடி பரஸ்பர பேச்சுவார்த்தைகளுக்கு ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மட் நிஜாம் வரவேற்பளித்துள்ளார்.

ஈரானிய ஜனாதிபதி அந்நாட்டு அரச தொலைக்காட்சியில் உரையாற்றுகையில், மிக விரைவிழல் அவ்வாறான பேச்சுவார்த்தைக்கு சாத்தியமிருப்பதாக கூறி னார்.

"எமக்கு சரிசமவாய்ப்பு வழங்கப்படுமாயின் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகவுள்ளோம். ஒருவர் உயர்ந்த நிலையிலும் மற்றவர் தாழ் நிலையிலும் இருக்கும் போது, அங்கு பேச்சுவார்த்தையொன்று இடம்பெற வாய்ப்பில்லை" என அவர் தெரிவித்தார். (அ)

# றோயல் கல்லூரி, கொழும்பு -07
# Royal College, Colombo - 07

க.பொ.த. (உயர்தர) முன்னோடிப் பரீட்சை
Pilot Examination

ஆனி 2008
June 2008

தரம் 13
Grade 13

வணிகக் கல்வி- I (பகுதி II)
Business Studies-I (Part II)

2 மணித்தியாலங்கள்
2 Hours

முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

(01) 1) உதாரணம் தந்து முதனிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைக் கைத் தொழில்களை விளக்குக.

2) பின்வரும் எண்ணக்கருக்களை விளக்குக.
a) வணிகம் b) உற்பத்தி c) பெறுமானம்

3) a) புதிய சட்டப்படி கம்பனியொன்றினைக் கூட்டிணைப்பதற்குத் தேவையான ஆவணங் களைத் தருக?
b) புதிய கம்பனிச் சட்டப்படி பதிவு செய்யப்படக் கூடிய கம்பனி வகைகளை இனங் காண்க.

4) பல வியாபார நிறுவனங்களில் "21 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்கப்படமாட்டாது"
a) இவ்விடயத்துடன் தொடர்புடைய சட்டம் யாது?
b) இச்சட்டத்தின்படி வணிக நிறுவனமொன்றினாலும் , நுகர்வோராலும் கடைப் பிடிக்க வேண்டிய நடைமுறைகள் எவை?

5) கூட்டுறவு வணிகங்களின் அபிவிருத்தி மீது அரசாங்கம் அதிக அக்கறை கொள் வதற்கான காரணங்கள் 03 குறிப்பிடுக.

6) இன்றைய பொருளாதாரச் சூழல் வணிக நடவடிக்கைகளின் மீது தாக்கம் செலுத் தும் வழிகள் 03 தருக?

(02) 1) பணத்தின் மெய்ப்பெறுமதி என்பதனால் கருதப்படுவது யாது?
இதில் ஏற்படும் மாற்றங்களையும் காரணங்களையும் இனங்காண்க.

2) வணிக வங்கிகளுடன் தொடர்புபடுத்தி கீழ்வரும் எண்ணக்கருக்களை விளக்குக.
a)ஆரம்ப ஒதுக்கீடு (Primary reserves)
b) உழைக்கும் சொத்துக்கள் (Earning Assets)

3) நிதிக்குத்தகைக்கும், செயற்பாட்டுக் குத்தகைக்கும் இடையிலான 03 வேறுபாடு களைக் குறிப்பிடுக.

4) தரவுகள் (raw Datas) என்பதனை உதாரணம் தந்து விளக்குக?

5) போக்குவரத்தில் கொண்டு செல்லப்படுகின்ற பொருட்கள் தொடர்பாக பெறக் கூடிய காப்புறுதி வகையினை இனங்கண்டு விளக்குக?

6) இன்று குறுதகவல் முறைமை (sms) மக்கள் மத்தியில் மிகவும் பிரமல்ய மடைந்திருப்பதற்கான காரணங்கள் எவை?

(03) 1) பங்குடைமை வணிகமொன்று, நீதிமன்ற உத்தரவின் மூலம் கலைக்கப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் 03 தருக?

2) பொதுத்து[illegible] வணிக நிறுவனங்களின் அனுகூலங்களும், பிரதி கூலங்களும் 03 தருக?

3) நீர் ஒரு நுகர்வாளர் என்ற முறையில் உமது முறைப்பாடுகளைத் தெரிவிக் கக்கூடிய 03 தரப்பினர்களைக் குறிப்பிடுக.

4) வணிகத்துடன் நெருங்கிய தொடர்புடைய சூழலைக் குறிப்பிட்டு அதன் உள்ளடக் கங்களைத் தருக?

(04) i) a)கம்பனியொன்றில் உள்ளக ரீதியாக ஏற்படக் கூடிய அக முயற்சியாண்மையின் முக்கியத்துவங்கள் எவை?
b)அக முயற்சியாண்மை (Entrapreneur Ship) தோன்றுவதற்கு எவ்வாறு வணிகமொன்று பங்களிப்புச் செய்யமுடியும் என விளக்குக?

ii) ஒரு கம்பனியிலுள்ள பங்கு முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற் றுவதில் கம்பனியின் கடமைப் பங்குகளை ஆராய்க?

iii) a) விளம்பர ஆராட்சியின் பிரிவுகளை இனங்காண்க?
b) சந்தைப்படுத்தல் ஆராட்சிக்கான தரவு திரட்டும் மூலகங்களையும், முறைகளையும் இனங்காண்க?

iv) a) இலாபத்தன்மை தொடர்பான விகிதங்களைக் குறிப்பிட்டு அதனைக் கணிப்பிடு வதன் நன்மைகள் எவை?
b) மேலே உம்மால் குறிப்பிடப்பட்டுள்ள சூத்திரங்களை எழுதி உதாரணம் தருக?

(05) i) a)மனித வள முகாமையின் குறிக்கோள்கள் 04 தருக?,
b) ஊழியர்களை தெரிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் உபாயங்களை இனங்காண்க?

ii) நிதி முகாமையாளரின் பணிகள் எவை?

iii) வணிகத் திட்டமொன்றில் காணப்படக் கூடிய தகவல்களை இனங்காண்க?

iv) a) பங்குச் சந்தையில் ஒரு முதலீட்டாளர் எவ்வாறு பங்குகளைக் கொள்வனவு செய்யமுடியும் என விளக்குக?
b) ஒரு பகிரங்க கம்பனி பங்குகளுக்குப் பதிலாக தொகுதிக்கடன் பத்திரங்களை வழங்கக் கூடிய சந்தர்ப்பங்களை தருக?

06) i) a) சந்தைப்படுத்தல் என்பதனால் கருதப்படுவது யாது?
b)சந்தைப்படுத்தல் மைய எண்ணக்கரு என்பதனை வரிப்படமூலம் விளக்குக?

ii) பணச்சந்தை (Money Market) , மூலதனச் சந்தை (CapitalMarket) என்பதனை அதன் உப சந்தைகளைக் குறிப் பிட்டு விளக்குக?

iii) a) நேரான சிந்தனையுள்ள ஒரு முகாமையாளரின் நடவடிக்கைகள் ஒரு வணிகத் தின் வெற்றியில் எவ்வாறு பங்களிப்புச் செய்ய முடியும் என விளக்குக?
b) ஒரு முகாமையாளருக்கு இருக்கக்கூடிய முக்கியமான திறன்களை இனங் காண்க?

iv) a) வணிகத்திட்டமொன்றினை தயாரிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் எவை?
b) சந்தைப்படுத்தல் திட்டத்திற்கும், வணிகத்திட்டத்திற்குமிடையிலான வேறுபாடு களை இனங்காண்க?

# குருவிடம் சரணாகதி

## இன்று குருபூர்ணிமா தினமாகும்

"எவர் குருவோ அவரே சிவன், எவர் சிவனோ அவரே குரு! '' இது பரம்பொருளான பரமசிவனே கூறிய உண்மை. எவர் ஒருவர் மூர்த்தி , தலம், தீர்த்தம் முறையாகத் தரிசித்து இறைதாகத்துடன் வாழ்கின்றாரோ, அவரிடம் பரம்பொருள் குருவடிவம் தாங்கி வந்து அவரைக் கடைத்தேற்றுவார். பரமசிவனே பார்வதிக்குக் குருதத்துவம் பற்றி '' ஸ்ரீகுரு கீதையில்" மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். இது ஸ்காந்தபுராணத்தில் ஒரு பகுதியாகும். சைவ சமயத்தினர் அனைவரும் கட்டாயம் இதைப் படித்துப் பயன்பெற வேண்டும். ஜபம், தவம், விரதம், தீர்த்தம், யாகம், தானம் ஆகியவை குருதத்துவம் அறியாவிடின் வீண்.

கு-இருள், ரு-ஒளி அதாவது அஞ்ஞான இருளைப் போக்குபவர் என்றும், கு- மூன்று குணங்களைக் கடந்தது, ரு-உருவத்தைக் கடந்தது அதாவது குணமும், உருவமும் இல்லாதவர் என்றெல்லாம் பொருள்படும்.

ஆன்மீக குருவானவர் சீடனின் முன்னேற்றத்திற்கான தடைகளை அகற்றுபவர். எமக்குள் ஆன்மீக விழிப்பை ஏற்படுத்தி, மாயையிலிருந்து விடுவித்து உள்முகமாகத் திருப்பி விடுபவர். "குருதரிசனம் சாபவிமோசனம்!'', "குருவருள் இன்றேல் திருவருள் இல்லை!'' என்பவை குருவின் சிறப்பைக் கூறும் பழமொழிகளாகும். "குருவிடம் எமது பாவ, புண்ணியங்கள் அனைத்தையும் அர்ப்பணித்து அவரைச் சரணடைய வேண்டும்!" என்று பகவான் ரமணமகரிஷி கூறுகின்றார்.

சுவாமி விவேகானந்தர் குருதேவர் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரை "கபால மோட்சனர்'' என்று போற்றித் துதிக்கின்றார். அதாவது எமது தலைவிதியை மாற்றியமைப்பவர் என்று பொருள்படும். ''சாதகன் ஒருவன் சத்சங்கத்துடன், சாதுசங்கமும் வைத்துக் கொண்டாலே இறைவனை எளிதில் அடையலாம்!'' என்று பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் கூறுகின்றார். இதன் சிறப்பை உலகெங்கும் உள்ள இராமகிருஷ்ண மிஷன்களில் காணலாம்.

தத்தாத்ரேய முனிவர் உலகில் காண்பவை அனைத்தையும் தமது குருவாகக் கண்டார். திருமூலர்தனது திருமந்திரத்தில்,

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே!"

என்று குரு தத்துவத்தைச் சிறப்பித்துள்ளார். இதேபோல பின்வரும் சுலோகத்தில் குருவே பிரம்மா, விஷ்ணு, சிவன் என வர்ணிக்கப்படுகின்றார்.


"குரு பிரம்மா குரு விஷ்ணு
குருதேவோ மகேஸ்வரா
குரு சாட்சாத் பரப்பிரம்மா
தஸ்மை ஸ்ரீ குருவே நமக!"

இங்கு குருவானவர் சீடனிடம் தெய்வீகச் சிந்தனைகளைப் படைப்பதால் பிரம்மா என்றும், சீடனிடம் நல்ல உயரிய பண்புகளை வளர்த்து காப்பதால் விஷ்ணு என்றும் சீட னின் தீயகுணங்களை அழிப்பதால் மகேஸ்வரன் என்றும் போற்றப்படுகின்றார்.

**சி.சிவமோகன்**
**தாவடி**

" என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்'' என்ற பாடல் மூலம் எம் மண்ணில் நடமாடிய போற்றுதலுக்குரிய யோகர் சுவாமிகள் குருவின் சிறப்பைக் கூறுகின்றார்.

நாமும் குருசேவை மூலம் மேன்மையுறலாம் என்று வலியுறுத்தும் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் போதனைகளைப் பின்பற்றி, வாழ்வில் மேன்மையைப் பெற்றிடுவோமாக.



கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் அண்மையில் இளவாலை வடக்கில் ஆரம்பித்துவைக்கப்பட்ட இலவசகணணிப்பயிற்சி நிலைய திறப்புவிழாவில் கரித்தாஸ் -கியூடெக் நிறுவன இயக் குனர் அருட்பணி கி.யோ.ஜெயக்குமார் மங்கல விளக்கேற்றுவதையும், தெல்லிப்பழை பிரதேச செயலர் முரளிதரன் உரையாற்றுவ தையும்,அருகில் இயக்குனர் அருட்பணி கி.யோ. ஜெயக்குமார்மற்றும் சுனாமி வாழ்வாதார திட்ட அலுவலர் யோ.தர்மநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# மலரும் சந்தங்கள் இறுவட்டு வெளியீடு

"மலரும் சந்தங்கள்" தரம் 4 ,5 இற்கான அழகியற் பாட இறுவட்டு வெளியீடு வட்டு இந்து நவோதயாக் கல்லூரியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் வே. குணபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் கலந்துகொள்வார்.

நூல் வெளியீட்டுரையை தேசிய கல்வியியற் கல்லூரி விசேட கல்வித்துறை விரிவுரையாளர் த.சிவகுமார், நூல் ஆய்வுரையை வலிகாம வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் க.மாதவகுமாரன் ஆகியோர் நிகழ்த்துவர். நூல் முதற்பிரதியை வலிகாம வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி ஜெ.அருள்மயம் பெற்றுக் கொள்வார். (அ-15)

# இரதோற்சவம்

(பருத்தித்துறை)

சரித்திரப் பிரசித்தி பெற்ற தென்புலோலி தான்தோன்றி கல்மலை உபய கதிர்காமக் கந்தன் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவத்தில் இன்று வெள்ளிக் கிழமை தேர்த்திருவிழாவும், நாளை சனிக் கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 4மணிக்கு திருவூஞ்சலும் இடம் பெறவுள்ளன. தீர்த்தத் திருவிழாவிற்கு பக்த அடியார்களுக்கான விசேட போக்குவரத்து வசதிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது. (52)

# முத்தமிழ் விழா

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி தமிழ்ப் பேரவை நடாத்தும் முத்தமிழ் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரிவிவேகானந்தா மண்டபத்தில்நடைபெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சைவசமயம்) திருமதி பாலசரோஜா பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-6)

# கிரிக்கெட் வீரர்களுக்கு சவாலானது டெஸ்ட் தான் என்கிறார் அனில் கும்ளே




கிரிக்கெட் வீரர்களுக்கு சவாலாக அமைவது டெஸ்ட் போட்டிதான் என இந்திய அணித் தலைவர் அனில் கும்ளே தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள இந்திய அணி முதல் கட்டமாக மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

முதல் டெஸ்ட் எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகிறது.

இத் தொடர் குறித்து இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் கும்ளே கூறியதாவது,

டெஸ்ட் போட்டிகள் என்றும் நிலைத்து நீடிக்கும் கிரிக்கெட் வீரர்களின் இறுதியான சவால் என்றால், அது டெஸ்ட் போட்டிதான்.

தனிப்பட்ட முறையில் எனது பல சாதனைகள் டெஸ்ட் கிரிக்கெட்டில் நிறைவேறியுள்ளன.

ஒருநாள் போட்டிகளில் ஓய்வு பெறுவதென்ற கடினமான முடிபை எடுத்தேன். இருபது -20 போட்டிக்கு அதிக ரசிகர்கள் உள்ளார்கள். ஊடகங்களும் ஆர்வம் காட்டுகின்றன.

அதற்கு சமமான ஆர்வத்தை இந்த டெஸ்ட் தொடருக்கும் தருவார்கள் என நம்புகிறேன்.

மற்ற கிரிக்கெட் போட்டிகளை விட டெஸ்ட் அதிக மதிப்பு வாய்ந்தது. இதற்கு ஊடகங்கள் எந்த அளவுக்கு முன்னுரிமை கொடுக்கின்றன என்பதைப் பொறுத்தே அதன் வெற்றி அமைந்துள்ளது.

90 சதவீத டெஸ்ட் போட்டிகளுக்கு முடிவுகள் தெரிய வந்துள்ள நிலையில் ஏன் டெஸ்ட் போட்டிகள் வீழ்ச்சியடைவதாக கருதவேண்டும்.

இருபது -20 வெற்றியால் பின்தங்குவது போல தோன்றுகின்றது. இது உண்மையில் ஒரு தோற்றப்பிழையே.

**புதிய விதிமுறை**

இந்தத் தொடரில் அறிமுகப்படுத்தப்படவுள்ள நடுவர் தீர்ப்பு பற்றிய புதிய விதிமுறைகளை வரவேற்கிறேன்.

நடுவர் தீர்ப்பை மறு பரீசிலனை செய்யும் உரிமை வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது எந்தளவுக்கு வெற்றி பெறும் என்பது இந்தத் தொடரில் தெரியவரும்.

ஏற்கனவே புதிய தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டுவரும் நிலையில், அதிலுள்ள தவறுகளை இதில் சரி செய்யமுடியும் என நம்புகிறேன்.

முக்கியமான எல்.பி.டபிள்யூ முறையில் ஏற்படும் தவறுகளை இதில் நிவர்த்தி செய்யலாம்.

டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற மகத்தான சாதனையை இத்தொடரில் சச்சின் எட்டுவார். இருப்பினும் எங்களது முக்கிய குறிக்கோள் தொடரை கைப்பற்றுவதுதான். இதில் சச்சினின் சாதனையும் சேர்ந்துகொள்ளும். இவ்வாறு கும்ளே தெரிவித்தார்.

**ஜெய்வர்த்தனா வரவேற்பு**

இலங்கை அணித் தலைவர் ஜெயவர்த்தனா கூறுகையில், ஒவ்வொரு கிரிக்கெட் வீரரின் வெற்றியும் அவரது டெஸ்ட் கிரிக்கெட்டின் பிரதிபலிப்பை பொறுத்துத்தான் அமையும்.

இருபது -20, ஒருநாள் போட்டிகள் வித்தியாசமானது தான் எனினும் வீரர்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல களம் டெஸ்ட் தான். நடுவர்களின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்வது ஒருசோதனை முயற்சியே என்றார். (5)

## 2-வது பரிசோதனையை நடாத்துங்கள் ஆசிப் கோரிக்கை

(கராச்சி)

ஊக்கமருந்து புகாரில் சிக்கியுள்ள பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் முகமெட் ஆசிப் 2-வது பரிசோதனை நடாத்துமாறு இந்திய கிரிக்கெட் சபையை கேட்டுக்கொண்டுள்ளார்.

ஐ.பி.எல் போட்டிகளின்போது முகமெட் ஆசிப் ஊக்கமருந்து பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அவரை பாகிஸ்தான் கிரிக்கெட்சபை தற்காலிகமாக அணியிலிருந்து நீக்கியது.

இந்நிலையில் முகமெட் ஆசிப் இந்தியக் கிரிக்கெட்சபைக்கு இ-மெயில் மூலம் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். இந்தக் கடிதத்தில் தனக்கு 2-வது பரிசோதனை நடத்துமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஊக்கமருந்து விவகாரத்தில் தான் நிரபராதி என்று முகமெட் ஆசிப் வாதிட்டு வருகிறார்.

ஏதாவது தவறு காரணமாக ஊக்கமருந்து அறிக்கை வெளியாகி இருக்கலாம் என்று அவர் நினைப்பதாக அவரது வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். (5)

# முரளிதரன் சிறந்த வீரராக தேர்வு



(கொழும்பு)

2008ஆம் ஆண்டுக்கான சிறந்த விளையாட்டு வீரராக இலங்கை கிரிக்கெட் அணியின் முத்தையா முரளிதரன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்ற வண்ணமயமான விழாவில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதற்கான விருதை முரளிதரனுக்கு வழங்கிக் கௌரவித்தார்.

கிரிக்கட் வரலாற்றில் தனி முத்திரை பதித்த முரளி டெஸ்ட் போட்டிகளில் 16 ஆண்டுகள் விளையாடிய அனுபவம் உடையவர்.

இதுவரை 120 டெஸ்ட்டில் பங்கேற்று 735 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்தார். ஒரு போட்டியில் சராசரியாக 6 விக்கெட் என்ற கணக்கில் விக்கெட்டை கைப்பற்றினார்.

2004இல் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கொட்னிவோல்ஸின் 519 விக்கெட்டுக்கள் என்ற சாதனையை முறியடித்து முதலிடம் வகித்தார்.

பின்னர் அவர் தோற்பட்டையில் காயம் காரணமாக பந்துவீச்சில் ஈடுபடவில்லை. அதனால் அவுஸ்திரேலிய சுழல்பந்து ஜாம்பவான் ஷேன்வோர்ன் 708 விக்கெட்டுக்களை சாய்த்து முதலிடத்தை பிடித்தார்.

இவருடைய இந்த சாதனை பல ஆண்டுகளாக முறியடிக்கப்படாமல் இருந்தது. இங்கிலாந்து அணிக்கு எதிராக கடந்த டிசம்பர் மாதம் கண்டியில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் கோல் கொலிங்வூட்டை ஆட்டமிழக்கச் செய்து ஷேன்வோர்ன் சாதனையை முறியடித்தார் முரளி. இதனால் முதலிடத்தை கைப்பற்றினார்.

இலங்கை முன்னணி கிரிக்கெட் வீரர் முரளி சிறந்த வீரருக்கான விருதை பெற முழுத் தகுதி உடையவர் என்பதில் சந்தேகமில்லை. (5)

# எனக்கு முன்மாதிரியாக யாரும் கிடையாது

## மென்டிஸ் சொல்கிறார்

(கொழும்பு)

எனக்கு யாரும் முன்மாதிரியானவர்கள் கிடையாது என இலங்கை சுழற்பந்துவீச்சாளர் மென்டிஸ் கூறியுள்ளார்.

**அசத்தல் நாயகன்**

இலங்கை கிரிக்கெட் அணியில் புதிய அவதாரமாக உருவெடுத்து இருப்பவர் 23 வயதான சுழற் பந்துவீச்சாளர் அஜந்தமென்டிஸ்.

ஆசியக்கோப்பைத் தொடரில் மொத்தம் 17 விக்கெட்டுக்களை கைப்பற்றிய மென்டிஸ் இந்தியாவுக்கு எதிரான இறுதிப்போட்டியில் 13 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 6 விக்கெட்டுக்களை அள்ளினார்.

ஒவ்வொரு பந்திலும் வித்தியாசத்தை காட்டி எதிராளிகளை திணறடிக்கும் மென்டிஸ் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளார்.

இலங்கை அணியில் முரளிதரன் போன்ற ஜாம்பவான்கள் இருந்தும் மென்டிஸ் தனக்கு என்று யாரையும் முன்மாதிரியாக வைத்துக் கொள்ளவில்லை.

அவர் அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது,

கிரிக்கெட்டில் எனக்கு முன்மாதிரி யாரும் கிடையாது. இலங்கையில் உள்ள நிறைய இளைஞர்கள் விரும்புவதுபோல் எனது சொந்த ஆட்டமுறையை வெளிப்படுத்த முயற்சிக்கிறேன்.

உள்ளூர் போட்டியில் இராணுவ கழக அணிக்கு எதிரான ஆட்டத்தில் 6 விக்கெட்டுக்களை கைப்பற்றியதுடன் துடுப்பாட்டத்தில் 78 ஓட்டங்களும் எடுத்தேன்.



இந்த ஆட்டம் எனது சகல துறை திறமையை பறைசாற்றியது.

**சேவாக்கால் நெருக்கடி**

கராச்சியில் நடந்த ஆசியக் கோப்பை இறுதியாட்டத்தில் சேவாக் களத்தில் இருந்த போது எனக்கு நெருக்கடி இருந்தது.

ஆனால் எனது முதல் ஓவரின் 2-வது பந்திலேயே அவரது விக்கெட்டை கைப்பற்றியதும் அந்த நெருக்கடி விலகிவிட்டது.

சர்வதேச கிரிகெட்டில் எனது முதல விக்கெட் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் கிறிஸ்கெய்ல் ஆவார். அந்த ஆட்டத்தில் நான் 33 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை எடுத்தேன்.

நான் இந்திப்படங்களை விரும்பிப் பார்ப்பேன். இந்திய நடிகர் ஷாருக்கான், நடிகை பிரித்தி ஜிந்தா எனக்கு பிடித்தமானவர்கள் இவ்வாறு அவர் கூறினார். (5)

## இருபது - 20 கிரிக்கெட்டானது மூன்று நிமிட 'நூடில்ஸ்' போன்றது ரணதுங்க கூறுகிறார்



இலங்கை அணியின் முன்னாள் தலைவர் ரணதுங்க அழிந்துகொண்டிருக்கும் டெஸ்ட் போட்டிகளை காப்பாற்றவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், அதிரடி இருபது -20 கிரிக்கெட் என்பது மூன்று நிமிடத்தில் தயாரிக்கப்படும் நூடில்ஸ் போன்றது. அதிரடியாட்டம் சில ஓவர்களில் ஓய்ந்துவிடும். இது அதிக பணத்தை கொடுக்கும். ஆனால் டெஸ்ட்டில் வீரர்கள் திறமையை வெளிப்படுத்த முடியும். அனைவரும் சேர்ந்து டெஸ்ட் கிரிக்கெட்டை காப்பாற்றவேண்டுமென்றார். (5)

# பாகிஸ்தானில் நடத்த முடியாவிடின் சம்பியன்ஸ் தொடர் இங்கிலாந்தில்

## ஐ.சி.சி தீர்மானம்

(டுபாய்)

பாகிஸ்தானில் சம்பியன் தொடர் போட்டிகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டால் மாற்று இடமாக இங்கிலாந்து தேர்வு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பரில் சம்பியன் தொடர் போட்டிகளை பாகிஸ்தான் நடத்தவுள்ளது.

எனினும் பாதுகாப்பு காரணங்களுக்கான இந்தப்போட்டி நடைபெறுவது கேள்விக் குறியாகியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை பாகிஸ்தானில் பாதுகாப்பு நிலையை ஆய்வு செய்து திருப்திகரமாக இருப்பதாக தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தானில் போட்டியை நடத்துவது தொடர்பில் முடிபெடுக்க நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சர்வதேச கிரிக்கெட் சபையின் கூட்டம் நடைபெறவுள்ளது.

சமீபத்தில் பாகிஸ்தானில் ஆசியக் கோப்பை போட்டிகள் எந்த அசம்பாவிதமும் இன்றி நடத்தப்பட்டன.

இந்திய-இலங்கை ஆகிய நாடுகள் பாகிஸ்தானுக்கு ஆதரவு தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அவுஸ்திரேலியா தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் பாகிஸ்தானில் விளையாடத் தயங்குகின்றன.

சம்பியன் தொடரை பாகிஸ்தானில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டால் இங்கிலாந்து மாற்று இடமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா இதற்கு முன்வந்தாலும் அந்த நாட்டுக்கு போட்டியை நடத்த போதிய அவகாசம் இல்லாததால் இங்கிலாந்து தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் தற்போது தென்னாபிரிக்க தொடர் நடைபெற்று வருவதாலும் அந்நாடு அடுத்த ஆண்டு இருபது -20 உலகக் கோப்பையை நடத்தத் தயாராக வருவதால் சம்பியன் தொடரை நடத்த ஏற்ற நிலையில் இருப்பதாக கருதப்படுகிறது. (5)

# கணனி மயப்படுத்தப்பட்ட பொதுமக்களின் விபரங்கள்

(கொழும்பு)

மன்னார் -தலைமன்னார் வீதியிலுள்ள கடற்படை முகாம் சோதனைச் சாவடியூடாகப் பயணிப்பவர்களின் விபரங்கள் சேகரிக்கப் பட்டுக் கணனி மயப்படுத்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பிட்ட சோதனைச் சாவடியூடாகப் பயணிக்கும் உயர் அதிகாரிகள் உட்பட அனைவரும் கடற்படையினரால் வீடியோ ஒளிப் பதிவு செய்யப்பட்டு அவர்களின் சகல விபரங் களும் திரட்டப்பட்டு அவை கணனி மயப்படுத் தப்பட்டிருப்பதாக மன்னாரிலிருந்து கிடைக் கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒருவர் அந்தச் சோதனைச் சாவடியூடா கச் செல்லும்போது குறிப்பிட்ட நபரின் அடை யாள அட்டை இலக்கத்தை மாத்திரம் கணனி யில் பதியும்போது பெறப்படும் அனைத்து விபரங்களையும் கடற்படையினர் கண்கா ணித்த பின்னரே அப்பால் செல்ல அனுமதிக் கப்படுவதாகத் தெரியவருகின்றது. (ச-5)

# கையடக்கத் தொலைபேசி இலக்கத்தினை வாகனங்களில் பார்வைக்கு வையுங்கள்

## பொலிஸார் அறிவுரை

தலைநகரிலும் அதனை அண்மித்த பகு தியிலும் பொது இடங்களில் நிறுத்தப்படும் வாகனங்களின் உரிமையாளர்கள் தங்களது கையடக்கத் தொலைபேசி இலக்கத்தை வாக னத்தில் பார்வைக்கு வைக்க வேண்டும் என்று கொழும்பு மாவட்டத்திற்கான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிமல் மெதிவக்க தெரி வித்தார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை நடை பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், சார்க் மாநாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைக ளுக்காகப் போக்குவரத்துப் பொலிஸா ரினால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன் ஒரு கட்டமாக கொழும்பில் வாக னப் போக்குவரத்தில் மாற்றங்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளதுடன் சில வீதிகள் பொதுப் போக் குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளன.

இந் நிலையில் சில சமயங்களில் போக்கு வரத்துப் பொலிஸாரினால் வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும். பாதுகாப்புக்காகப் போக்கு வரத்துப் பொலிஸார் மேற்கொள்கின்ற அவ சர நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கும் வகையில் கொழும்பிலும் அதனை அண் மித்த பகுதிகளிலுள்ள பிரதான வீதிகளில் வாகனங்களை நிறுத்தி விட்டுச் செல்வோர் தங்களது கையடக்கத் தொலைபேசி இலக் கத்தை வாகனத்தில் பார்வைக்கு வைக்கு மாறு பொலிஸார் வாகனச் சாரதிகளை கேட் டுள்ளனர். (ச-5)

# வலி.கிழக்குப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பேரவை நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோ கன்ராஜ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுகளில் முதல்நாள் நிகழ்வு கோப்பாய்ப் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரி யர் என்.சண்முகலிங்கன் கலந்துகொள்வார். இரண்டாம் நாள் நிகழ்வுகள் ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் இடம்பெறும். இந் நிகழ் வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் கலந்து கொள்வார்.(ந)

## தமிழக மீனவர்கள் தாக்கப்...

நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி அமைதியான சூழல் திரும்புவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் கருணாநிதி, கடல் எல் லையை மீறுகின்ற தமிழக மீனவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதில் இலங்கைக் கடற்படை தவிர்க்க வேண்டும் எனக் கூறி யுள்ளார்.

கச்சதீவு ஒப்பந்தத்தில் தமிழக மீனவர்க ளின் பாரம்பரிய உரிமைகள் பாதுகாக்கப்பட் டிருந்ததையும் பின்னால் அப் பிரிவுகள் நீக் கப்பட்டதையும் சுட்டிக்காட்டி மீண்டும் அவ் உரிமைகள் நிலைநாட்டப்படும் நேரம் வந்தி ருப்பதாகக் கூறினார்.

இதனிடையே நேற்றுக் காலை முதல்வர் கருணாநிதியையும் உயர் அரச அதிகாரிக ளையும் இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் சந்தித்தபோது, பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பங்களுக்கு 5.இலட்சம் ரூபாய் வரை நஷ்ட ஈடு வழங்கப்படும்.

மற்றும் தமிழக அமைச்சர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு மீனவர் களின் பிரச்சினை பற்றி மத்திய அரசுக்கு எடுத்துக் கூற புதுடில்லி செல்லும் என்ற வாக் குறுதிகளின் பேரில் தங்களது வேலை நிறுத் தத்தினை முடித்துக் கொள்வதாகத் தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## ஆனையிறவை நோக்கிய நடவ...

எதிரிக்கு பாரிய இழப்புக்களை ஏற்படுத்தி யுள்ள அதேவேளை எமக்கு கள யுத்தியின் அடிப்படையில் பல பயன்களைத் தந்துள் ளது. இந் நடவடிக்கைகளில் இராணுவத்தை விட புலிகளுக்கே அதிக இழப்பு ஏற்பட்டது.

புலிகள் எம்மைத் தாக்கும் வரை காத்தி ருக்க முடியாது. அதனால்தான் கடந்த தட வைகளில் நாம் தாக்குதல்களை மேற்கொண் டோம். அந்த வகையில் எமக்குப் பின்னடை வேயில்லை.

இதனை விட யாழ்.முன்னணி காவலரண் களில் எமது படையினர் புலிகளுக்குத் தொடர்ச்சியான இழப்புக்களை ஏற்படுத்தி வருகின்றார்கள். வலிந்த தாக்குதல்களில் நாம் பாரிய வெற்றிகளையீட்டி வருகின்றோம்.

சிறப்புப் படையணியினரைத் தேவைக் கேற்ற வாறு பயன்படுத்தி அவர்களின் உச்ச வளத்தைப் பெற்றுக் கொள்கின்றோம். புலி களுக்கெதிரான போர் அநேகமாக இந்த ஆண்டுக்குள் முடிபடைந்து விடும் என்று கூறினார்.

யாழ்.நிலைவரம் குறித்துக் கேட்டபோது அவர் பதிலளிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் அமைதியாகவுள்ளது. மக்கள் மகிழ்ச்சியாகவுள்ளார்கள். 2005 ஆம் ஆண்டு இருந்ததைவிட நிலைமை இப் போது எவ்வளவோ முன்னேற்றமடைந்துள் ளது.

விடுதலைப்புலிகள் கிட்டத்தட்ட முற்றாக அகற்றப்பட்டு விட்டார்கள். முன்பிருந்ததை விட மிகமிகக் குறைந்தளவு - 50ற்கும் குறை வான எண்ணிக்கையிலான புலிகளே இப் போது குடாநாட்டில் உள்ளார்கள்.

குடாநாட்டில் இடம்பெறும் வெள்ளை வான் கடத்தல் சம்பவங்களுக்கும் எமதுபடை களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எமது படையினர் தமது தொழிலை மட்டுந்தான் செய்கின்றார்கள். வேறு குழுக்களுடன் இணைந்து செயற்படவில்லை என்று தெரி வித்துள்ளார். (ச-5)

## தமிழருக்கு எதிரான மனித...

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப் புக் குழுவை இலங்கையில் நியமிக்க வேண் டும் என ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடு கள் சபையின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மற் றும் உள்ளூர் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் முன்வைத்த யோசனைக ளுக்கு எதிராக சில இலங்கை அதிகாரிகள் கருத்துக்களை வெளியிட்டிருப்பது துரதிர்ஷ்ட வசமானது என மனித உரிமைகள் கண்கா ணிப்பகத்தின் சிரேஷ்ட சட்ட ஆலோசகர் ஜேம்ஸ் றோஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு ஒன்றை இலங்கையில் நியமிப்பதன் மூலம் அனைத்து மனித உரிமை மீறல்க ளையும் முடிவுக்குக் கொண்டு வர முடியாது.

எனினும் இதன் மூலம் இலங்கையின் அனைத்துச் சமூகத்திற்கும் பெரும் அச்சுறுத் தலாகக் காணப்படும் மனித உரிமை மீறல் களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடி யும் எனக் கூறியுள்ளார்.

உலகத்தின் அனைத்துப் பகுதியிலிருந் தும் நன்கு அனுபவம் வாய்ந்த, பயிற்றுவிக் கப்பட்ட கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். இவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கீழ் கண் காணிப்புப் பணிகளை முன்னெடுக்க வேண் டும்.

வடக்குக் கிழக்கு மற்றும் கொழும்பு உள் ளிட்ட குறிப்பாக தமிழர்கள் பலவந்தமாக தமது பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட பகுதிக ளில் இந்தக் கண்காணிப்பாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட வேண்டும் என மனித உரிமை கள் கண்காணிப்பகத்தின் சட்ட ஆலோசகர் குறிப்பிட்டார்.

இலங்கையில் சர்வதேச மனித உரிமை கள் கண்காணிப்பாளர்கள் குழுவொன்றை நியமிப்பது குறித்துத் தாம் கவனம் செலுத்தி யிருப்பதாகவும் இந்த விடயம் தொடர்பாக ஆராயப்படும் என இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்குப் பதிலளித்திருப்பதாக வும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் அவசர காலச் சட்ட விதிக ளுக்கு அமைய பாதுகாப்புப் படையினர் தன் னிச்சையாகக் கைதுகளை மேற்கொள்ளவும் நீதிமன்றங்களில் நிறுத்தாமல் தடுத்து வைப்ப தற்கும் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப் பட்டிருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப் பகம் கூறியுள்ளது. (ச-5)


**2 ஆம் தவணைப் பரீட்சை**

**வெற்றி இலக்கு - 5**

**பயிற்சிப் பரீட்சை**

**தரம் 1,2,3,4,5**

22.07.2008 வெளிவருகிறது.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

வினாத்தாள் பெறும் இடம்:- தயா அச்சகம், 138, நாவலர் றோட், (மனோகரா தியேட்டர் சந்தி; நாவலர் பாடசாலை முன்பாக), யாழ்ப்பாணம். (C-1338)


## வவு.பூந்தோட்டம் முகாமில்...

அனர்த்தத்தின்போது ஐந்து பேர் சிறிய எரி காயங்களுக்குள்ளாகி வவுனியா வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் தீ அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 3 ஆயிரம் பேர் தற்போது அரச அதி பர் கே.சண்முகத்தின் ஏற்பாட்டில் அங்குள்ள பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள் ளனர். அவர்களுக்கான உலர் உணவு மற் றும் உடைகளைப் பொது அமைப்புக்கள் பல வும் வழங்கியுள்ளன.

இச் சம்பவம் குறித்து அரச அதிபர் கே. சண்முகம் தெரிவித்துள்ளதாவது, தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் பணியை உடனடியாக ஆரம்பித்துள்ளோம். முகாமிலிருந்த நூற் றுக்கும் அதிகமான குடும்பங்களின் குடிசை கள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன.

தீ விபத்திற்கு மின்சார ஒழுக்கே காரணம் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றார்.

பூந்தோட்டம் பாடசாலைக் கட்டடத்திலே யே இந்த முகாம் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இச் சம்பவத்தின்போது தங்க நகைகள், பணம் மற்றும் சொத்துக்கள் முற் றாக எரிந்து போயுள்ளதாகப் பாதிக்கப்பட்ட வர்கள் தெரிவித்தனர். (ச-5)

## அவுஸ்தி...

மன்ற சட்டத் தரணியாக 1968 ஆம் ஆண்டு அவர் பதிவு செய்திருந்தார். அவுஸ்திரேலி யாவுக்கான 18-வது தூதுவராகத் தற்போது அவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-5)

## பட்டதாரி...

கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல ஆவ ணங்களும் நேர்முகத் தேர்வுத் தினத்தன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதைக் கவ னத்தில் கொள்ளுமாறு வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (ச-5)

## விடத்தல்...

தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாண யக்கார தெரிவித்தார்.

எம்.ஐ.-24 ரக தாக்குதல் ஹெலிகொப் டரைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதலை மேற் கொண்டதாக அவர் குறிப்பிட்டார். கடற்புலி உறுப்பினர்கள் தங்கியிருந்த முகாம் ஒன்றை இலக்கு வைத்து இந்தத் தாக்குதலை நடத்தி யதாக விமானப் படைப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

## கடத்தப்பட...

பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டி ருந்தது.

இதனடிப்படையில் சந்தேகத்தின் பேரில் ஈ.பி.டி.பி. அமைப்பின் பிரதேச அமைப்பா ளர் உட்பட 4 உறுப்பினர்கள் கைது செய்யப் பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள் ளார்கள்.

விசாரணை நடவடிக்கைகளையடுத்து மேலும் இரு ஈ.பி.டி.பி.உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அவர்கள் கொடுத்த தக வலையடுத்தே இந்தப் புதைகுழி கண்டுபிடிக் கப்பட்டதாகவும் ஏறாவூர்ப் பொலிஸார் கூறு கின்றார்கள். (எ-5)

## அனுசரணையாளராகச்...

பாகக் கேட்டறிந்து கொண்டிருக்கும் ஐஸ்லாந்து ஜனாதிபதி, விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகள் தொடங்கும் பட்சத்தில் அனுசர ணையாளர்களாகப் பணியாற்றுவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் ஐஸ்லாந்து இடம்பெற்றிருந்தபோது மேற் கொண்ட நடவடிக்கைகள், அனுசரணையா ளர்களாகப் பணியாற்றும் போதும் தொடரும் என அவர் கூறியுள்ளார்.


ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை யில் இடம்பெற்ற தேர்தலில் இலங்கைக்கு ஆதரவாக ஐஸ்லாந்து செயற்பட்டமைக்கு நன்றி தெரிவித்த ரஞ்சித் ஜெயசூரிய, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப் புரிமையற்ற நாடாக ஐஸ்லாந்து இணைந்து கொள்வதற்கு இலங்கை ஒத்துழைப்பு வழங் கும் எனவும் உறுதி மொழி வழங்கியுள்ளார்.

இலங்கையின் அரசியல் நிலைமைகள் குறித்து அக்கறையுடன் கேட்டறிந்து கொண்ட கிரிம்ஸன், வட பகுதியில் முன்னெடுக்கப்பட் டிருக்கும் இராணுவ நடவடிக்கைகள் தொடர் பாகவும் தெரிந்து கொண்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் தாம் பலமிழந்திருக் கும் போதெல்லாம் பேச்சுவார்த்தைக்குச் செல் லத் தயாராகவேயிருந்துள்ளனர் என ஐஸ் லாந்து ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டிய ஜெயசூரிய, எனினும் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை முழுமையாகக் கைவிடும் பட்சத்தில் இன்றே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார். (ச-5)

# கண்ணீர் அஞ்சலி

**வலம்புரி நிறுவனத்தைச் சேர்ந்த திரு.எஸ்.ஏ.தங்கத்துரை அவர்களின் அன்பு மாமியார்,**



**திருமதி**

**ஜேன் செல்வநாயகி அம்மா தம்பிஐயா**

**அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து கவலையடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**- வலம்புரிக் குடும்பம்**

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.